# களத்தில்

(15.07.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (212)




காலங் காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் - சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள் சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக் கண்ணீர் - இவை எல்லாம் பௌத்த தேசத்தின் காருண்யத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்

# கறுப்பு ஜுலை

**கண்ணீரும் செந்நீரும் தோய்ந்த அந்தக் கனத்த நினைவுகள், காலத்தால் அழியாத ரண வேதனை தரும் வடுக்கள். உடல் வதையும் உயிர் வதையும் தாங்கி கொடுந் துன்ப துயரங்களைச் சந்தித்து, ஆதரிப்பார் யாருமின்றி தமிழினம் அவலப்பட்ட நாட்களின் நினைவுகள் மறப்பதற்கில்லை; மீள நினைவு படுத்த. ஆழப்புதைந்து கிடந்த தமிழரின் விடுதலைச்சுவாலை மூசிக் கிளர்ந்தெழச் சிங்களம் வார்த்து விட்ட நெய்யது.**

**கறுப்பு ஜுலை........ கண்ணீர் சிந்துவதற்கல்ல! விடுதலையின் அவசியத்தை சிந்திப்பதற்கு!**

"1983 யூலை 24 தொடக்கம் ஓகஸ்ட் 10 வரைக்கும் 316 தமிழர்கள் கொல்லப்பட்டனர். யூலை 24–29 வரைக்கும் 1321 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. 72 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன. 281 தமிழ்ப்பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். 84 தமிழ்க் குடும்பங்கள் காடையரால் உயிரோடு கொழுத்தப்பட்டனர். 79000 தமிழர்கள் தமது தாயகத்திலேயே ஏதிலிகளாக்கப்பட்டனர்" இத்தரவுகள் யாவும் சிங்களத்தின் வெகுசனத் தொடர்பு சாதனங்களால் அறிவிக்கப்பட்டவை. உண்மையில் தமிழர்க்கு ஏற்பட்ட இழப்புக்கள் இதனைவிடப் பலமடங்கு ஆகும்.



## சிங்களத்தைப் பயமுறுத்தும் கறுப்பு யூலை

### இரண்டு வாரத்தில் மூன்று முறை முயற்சித்து மூக்குடைபட்டுள்ளது சிங்களம்

யாழ் குடாநாட்டில் யுத்தம் ஓய்ந்திருக்கின்றது. பீரங்கிகளினதும் துப்பாக்கிகளினதும் முழக்கம் தணிந்து அமைதி நிலவுகின்றது. தற்காலிக அமைதி இது புயலுக்கு முந்தைய அமைதி என்பது சிங்களத்திற்கு நன்கு தெரியும். தாயகத்தின் பெரும் பகுதியை குறுகிய காலத்திற்குள் மீட்டெடுத்த [illegible] அடுத்த பாய்ச்சலுக்கு [illegible] முன்னால் தம்மை தயார்படுத்துகின்றார்கள் என்பது சிங்களத்திற்கு தெரியும்.

இந்த நிலையில், சிறிலங்காப் படையினர், பல முனைகளில் வலிந்த தாக்குதல்களையும் தரை நகர்வு முயற்சிகளையும் மேற்கொண்டு பார்த்து, மூக்குடைபட்டிருக்கின்றனர்.

மணலாற்றில் கடந்த 30 ஆம் திகதி பெரும் எடுப்பிலான தரை நகர்வு முயற்சியொன்றை சிங்களப்படை மேற்கொண்டது. மணலாற்றில் கஜுபாபுரப் பகுதியில், டாங்கிகள் கவசவாகனங்கள் சகிதம், விமானப்படை மற்றும் ஆட்டிலறிப்பிரிவின் உதவியுடன், விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண்களைத் தாக்கி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் முன்னேறினர் சிங்களப் படையினர். பெரும் எடுப்பில் போதிய சுடுகல சக்தியுடன் புறப்பட்டுச் சென்ற சிங்களப் படையினர் ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் செல்ல முடியாதபடி தடுத்து நிறுத்தி சண்டை செய்த விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த் தாக்குதலை நடத்தி சிங்களப் படைக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தினர். காலையில் தொடங்கி மாலைவரை கடுமையான எதிர்த் தாக்குதலை நடத்திய விடுதலைப் புலிகள் சிங்களப் படையினரை அவர்களின் பழைய நிலைகளுக்கே விரட்டியடித்தனர். இவ் வீரமிகு தாக்குதலில் விடுதலைப் புலிகளில் 16 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

மணலாற்றில் இத்தகைய முயற்சி எடுத்து தோல்வியைச் சந்தித்த சிங்களப் படையினர், நான்கு நாள் இடைவெளியில் கடந்த நான்காம் திகதி, வட[illegible] கிழக்கில் அடுத்த தரை நகர்வு முயற்சியொன்றை மேற்கொண்டனர். சிங்கள இராணுவத்தின் சிறப்புப் பயிற்சி பெற்ற விசேட கொமாண்டோப் பிரிவான 53 வது படையணியைச் சேர்ந்த சிங்களப் படையினர் இதில் ஈடுபட்டனர். நாகர்கோவில் படை முகாமிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி சிங்களப்படை முன்னேற முற்பட்டது. விமானங்கள் குண்டுகளைக் கொட்ட ஆட்டிலறிகள் பொழிந்துதள்ள, சிங்களத்தின் சிறப்புக் கொமாண்டோக்கள் அங்குல அங்குலமாக தமிழர் பூமியை ஆக்கிரமிக்க மிகவும் கடுமையாக சண்டை செய்தார்கள். காலை 5.30 மணிக்கு சிங்களப் படை ஆரம்பித்த ஆக்கிரமிப்பு முயற்சியை, சிங்களப் படைக்கு பெரும் இழப்புக்களைக் கொடுத்து, சிங்களப் படையை வந்த வழியே விரட்டியடித்து, அவர்களின் பழைய நிலைகளுக்குள் முடக்கி, மாலை ஏழு மணிக்கு விடுதலைப் புலிகள் அந்த நடவடிக்கையை முடித்து வைத்தனர். இந்த நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் தரப்பில் 17 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இந்தத் தோல்வியை தொடர்ந்து சிங்களப்படை மற்றுமொரு முயற்சியை குடாநாட்டில் மேற்கொண்டது. நாகர்கோவிலில் தோல்வியடைந்து ஆறு நாள் இடைவெளியில் கடந்த 10 ஆம் திகதி அரியாலையைக் குறிவைத்து முன்னேறியது. காலையில் தொடங்கி மாலை வரை கடுமையான சண்டை. சிங்களப் படைக்கு மீண்டும் இழப்பை ஏற்படுத்திய விடுதலைப் புலிகள், சிங்களப்படையை வந்த வழியே விரட்டியடித்தனர்.

அடுத்த தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றார்கள் என்பதும், கூடவே கறுப்பு ஜுலையும் சிங்களத்தை மோசமாகப் பயமுறுத்திக் கொண்டிருப்பதும் வெளிப்படுகின்றது இத்தகைய முயற்சிகளைக் கொள்ளலாம். விடுதலைப் புலிகளின் தாக்குதல் கவனத்தைச் சிதறடிப்பது இதன் நோக்கமாக இருக்கலாம். பல களங்களைத் திறந்து விடுதலைப் புலிகளின் ஒன்று குவிந்த தாக்கும் திறனைச் சிதறடிப்பது, ஓயாத அலைகள் மூன்றின் அடுத்த கட்டத்தில் நடக்கும் ஆபத்துக்களை சற்று குறைத்து விடுவது என்ற வகையில், சிங்களம் இத்தகைய திட்டங்களை போட்டு முயற்சித்துப் பார்க்கின்றது போலும்.

அல்லது புலிகள் எங்கு பலமாக உள்ளார்கள், எங்கு பலவீனமாக உள்ளார்கள் என்று பலம் பார்க்கும் நடவடிக்கைகளும் இவை இருக்கலாம்.

மணலாற்றிலும், நாகர்கோவிலிலும், அரியாலையிலும், சிங்களப்படை ஒரு தெளிவான புரிதலை விடுதலைப் புலிகளிடமிருந்து பெற்றிருக்கின்றது. நாட்டின் எந்த பகுதியிலும் விடுதலைப் புலிகள் பலமாக இருக்கின்றார்கள் என்பதுதான் அது. சிங்களப் படையின் ஆக்கிரமிப்பை மேற்கொண்டு அனுமதிப்பதில்லை என விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கின்றார்கள் என்பதும் அங்கு அவர்களுக்கு உணர்த்தப்பட்ட பாடங்கள். ■

"விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் ஒரு பொழுதும் ஓய்ந்து விடப் போவதில்லை. எமது போரின் இலட்சியம் நிறைவெய்தும் வரை அலைகள் ஓயாது"

"ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆயுதங்கள் அல்ல. போரிடுபவர்களின் மனோதிடமும், உறுதியும், இலட்சியப்பற்றுமே ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிக்கின்றது"

"தமிழ் மக்களின் தன்னாட்சியுரிமை, தேசியத் தலைமை போன்ற அடிப்படைப் பிரச்சனைகளை உதாசீனம் செய்யும் எந்தப் பொதியையும், தீர்வுத் திட்டத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம் பரிசீலிக்கத் தயாரில்லை"

"எமது தேசத்தின் அரசியல் அந்தஸ்தையும் தலைவிதியையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது எமது மக்கள்தான், தமிழீழ மக்கள்தான்"



→ 3

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



## தீர்வுப்பொதி

## வெறும் எலும்புக்கூடு

தீர்வுப்பொதி, சமாதானப்பேச்சுவார்த்தை, இந்திய மத்தியத்துவம் என்றெல்லாம் கடந்த சில நாட்களாக செய்திகள் பலமாக அடிபட்டுவந்துள்ளன. இடைக்கால நிர்வாக சபைகுறித்தும், அதில் அங்கம் வகிக்க விடுதலைப் புலிகளை அனுமதிப்பதா என்பது குறித்தெல்லாம் சந்திரிகா அரசு பேசியது. கூடவே, பல நாடுகளில் இருந்தெல்லாம் நவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்திருப்பதால் படையினரின் மனோபலம் அதிகரித்திருப்பதாகவும், விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் நடவடிக்கையை முடக்கிவிட்டதாகவும் சிறீலங்கா அரசு மனம்போனபோக்கில் அட்டகாசமான பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தது. இவையாவும் ஒருவிதமான மனக்குழப்பத்தை தமிழ்மக்களிடத்தே ஏற்படுத்தியிருக்கக்கூடும்.

சிறீலங்கா அரசின் கட்டுப்பாடற்ற பிரச்சாரத்திற்கு பதிலோ அல்லது கருத்துக்களோ தெரிவிக்காமல் விடுதலைப் புலிகள் மௌனம் சாதித்துவந்தது, கற்பனாவாதிகளின் காட்டில் மழையாகப் பொழிந்தது.

அண்மையில், பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையொன்றிற்கு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வழங்கிய செவ்வி, இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. சந்திரிகாவின் மேதாவித்தனமான போக்கிற்கும் பேச்சிற்கும் சரியான பதிலடியை விடுதலைப் புலிகள் வழங்கியிருக்கின்றனர். சந்திரிகா அரசின் தற்போதைய தீர்வுப்பொதி இரத்தமும் சதையும் உறிஞ்சியெடுக்கப்பட்ட வெறும் எலும்பக்கூடு என, விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அதனை வர்ணித்ததில் இருந்து, அது ஆராய்வுக்குரிய விடயமேயல்ல புதைக்கப்படவேண்டிய விவகாரமாகிவிட்டது.

ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு இடைக்கால நிர்வாகசபையில் விடுதலைப் புலிகள் இணைந்துகொள்ளலாம் என்று திமிர்த்தனமாக பேசிய சந்திரிகாவை, யதார்த்தம் புரியாத களநிலவரம் அறியாத வெறும் கற்பனாவாதியாகவே விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் பார்க்கின்றனர். ஒரு இடைக்கால நிர்வாகத்தில், ஒருசில ஆசனங்களில் போட்டியிடுவதற்காக, எமது மக்களின் ஒரேயொரு பாதுகாப்புச் சாதனமான ஆயுதங்களைப் போட்டுவிட்டு, போராட்டத்தை கைவிடுவதற்கு நாம் என்ன வடிகட்டின முட்டாள்களா என்று, திரு பாலசிங்கம் கேள்வியெழுப்பியதில் இருந்து, விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டில் கொண்டுள்ள இறுக்கத்தை சந்திரிகா அரசும் கூடவே சிங்களப் பேரினவாதமும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஓயாத அலைகள் தன் இலக்கை அடையும் வரை ஓய்ந்துவிடப்போவதில்லை என்று திருபாலசிங்கம் தெரிவித்ததானது, சந்திரிகா அரசு வாங்கிக்குவித்த பல்குழல் ஏவுகணைச் செலுத்தியைவிட தாக்கம் மிகுந்த தாக்கத்தை அது சிங்களத்திற்கு ஏற்படுத்தியிருக்கும். ஓயாத அலையின் அடிப்பிற்கு அள்ளுண்டுபோக அது காத்திருக்க வேண்டியதுதான் என்பது விடுதலைப் புலிகளின் அறிவித்தல்.

வெளிநாடுகளின் வெளிச் சக்திகளின் தலையீடுகள் அழுத்தங்கள் விடுதலைப் போராட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற சந்தேகங்கள் நம் மக்களின் மனங்களில் ஏற்படாமல் இல்லை. இதற்கெல்லாம் விடுதலைப் புலிகள் தெளிவான பதிலைக் கொடுத்திருக்கின்றனர். எமது மக்களின் தலைவிதியை தீர்மானிக்கின்ற சக்தி எமது மக்களிடம் அன்றி வேறு யாரிடமும் இல்லை என்ற கருத்து, எமது மக்கள் தமது சொந்தக்காலில், சொந்தப் பலத்தில் தமது விடுதலைப் போராட்டத்தை கட்டிவளர்த்திருக்கின்றனர் என்ற தூய்மையான நெஞ்சுரம் அந்த நிலைப்பாட்டில் சுடர்விடுகின்றது. தமிழரின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாணும் விடயத்தை நிர்ணயிக்கும் சக்தி அமெரிக்க வல்லரசிடமோ அன்றி இந்திய பிராந்திய வல்லரசிடமோ, அல்லது சிறீலங்கா அரசிடமோ இருக்கவில்லை. எமது மக்களின் எமது தேசத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தி எமது மக்களிடம் மாத்திரமே உண்டென்று திரு. பாலசிங்கம் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்திருக்கின்றார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்தியா மத்தியத்துவம் செய்ய முன்வர வேண்டும் என்றெல்லாம், சிறீலங்காவில் குரல்கள் கேட்க ஆரம்பித்திருக்கின்றன. இந்தியா தமிழீழ விடுதலையை ஒருபோதும் ஆதரிக்காது என்ற நம்பிக்கையுடனும், விடுதலைப் புலிகளை ஒரு எதிர்த்தரப்பு நிலையில் வைத்தே இந்திய அரசு தனது மத்தியத்துவ முயற்சியில் ஈடுபடும் என்பதுமே இத்தகைய குரல்களின் நினைப்பும் நம்பிக்கையும்.

அன்று, இந்திய அரசு, ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குகின்றது. ஆயுதங்கள் பயிற்சிகள் வழங்குகின்றது. இலங்கை உள்நாட்டுப் பிரச்சினையில் தலையீடு செய்கின்றது என்று நெருப்பெடுத்த சிங்களப் பேரினவாதிகள்தான், இன்று இந்தியாவை விருப்புடன் அழைத்து சிவப்புக் கம்பளம் விரிக்கின்றனர்.

இந்தியாவை விடுதலைப் புலிகள் வெறுக்கவில்லை. மாறாக நட்புசக்தியாக்கவே விரும்புகின்றனர். இந்தியாவின் பாத்திரத்தை விடுதலைப் புலிகள் அலட்சியப்படுத்தவில்லை. அதன் பிராந்திய வல்லாண்மையையும் முக்கியத்துவத்தையும் விடுதலைப் புலிகள் மறுக்கவில்லை.

இந்தியா இலங்கைப் பிரச்சினையில் மத்தியத்துவம் வகிக்க விரும்பின் அதனை விடுதலைப் புலிகள் நிராகரிக்கும் நினைப்பிலும் இல்லை.

ஆனால் அதற்கு முன்னராக, விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கியாக வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்துவிட்டு, வேண்டப்படாத தரப்பாக, தீண்டப்படக்கூடாத எதிர்த்தரப்பாக மதித்துக் கொண்டு, மத்தியத்துவம் செய்வது சாத்தியம் தானா? இதனை தமிழர் தரப்பு நியாயம் நிறைந்த நடுநிலையென எப்படி எடுத்துக்கொள்ளும்? சிறீலங்காவின் அனைத்து வளங்களையும் ஒரு சேரக்குவித்து யுத்தத்தை நடத்திவரும் சந்திரிகா அரசு, 'யுத்தத்திற்கே நாட்டில் முதலிடம் என அறிவித்துள்ளார். தமிழ்மக்களுக்கெதிரான யுத்தத்தை நடத்திவரும் சந்திரிகா அரசுக்கு, மனிதாபிமான நோக்கோடு என்று கூறிக்கொண்டு இந்திய அரசு பெருந்தொகை நிதியுதவியை வழங்கி சிறீலங்காவிற்கு தனது நட்பை வெளிப்படுத்தியிருக்கின்றது. ஆனால் விடுதலைப் புலிகளை தடைசெய்து வைத்திருக்கின்றது.

மத்தியத்துவம் செய்ய இந்தியாவிற்குண்டான பாத்திரம் உணரப்படும் நிலையில், விடுதலைப் புலிகளையும் சமமாகப் பாவிக்கும் பக்குவத்தை இந்தியா கொண்டிருக்கவேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. எமது மக்களின் நிலைப்பாடும் அதுவே.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, மத்தியத்துவம் செய்ய இந்தியா தயாராகும் நிலை தோன்றினால், இந்தியாவிற்கு சிவப்புக்கம்பளம் விரித்த சிங்களப் பேரினவாதிகள் அவற்றைச் சுருட்டி வைத்துவிட்டு இந்தியாவிற்கெதிராக கறுப்புக்கொடி காட்டுவர் என்பது திண்ணம். ■

## ம.தி.மு.க மாநாட்டில் — மடை திறந்த வெள்ளம்போல் தமிழர் கூட்டம். விண்ணதிர தமிழீழ ஆதரவுக் கோசம்.

ஜூலை 1,2 ஆகிய இரண்டு தினங்களில் தமிழகத்தில் ஈரோடு மாநகரில் ம.தி.மு.க வின் ஈரோடு மாவட்ட முதல் மாநாடு பேரணியோடு சிறப்புடன் நடந்தேறியது. ஜூலை 1ம் திகதி மதியம் 2.30 மணிக்கு ஈரோடு வ.உ.சி நினைவுப் பூங்காவில் பேரணி ஆரம்பமாகியது. பேரணியில் திரண்ட பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் ஈழ ஆதரவுக் கோசங்களை எழுப்பினர். வெல்லட்டும் தமிழர் வழி, ஒலிக்கட்டும் ஈழ ஆதரவுக்குரல் என்ற கோசங்கள் வான் முட்ட எழுந்தன. பேரணிக்கு வந்த பெருந்தொகையான மக்கள் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப் படங்களை பெரு விருப்போடு அணிந்த வண்ணம் அணிவகுத்துச் சென்றனர். இன்னும் சிலரோ விடுதலைப் புலிகளைப் போன்று சீருடை தரித்து கம்பீரமாகச் சென்றனர். பேரணியில் கலந்து கொண்ட மக்களிற் சிலர் தரித்திருந்த தமிழீழத் தேசியத் தலைவரவர்களின் உருவப்படங்களை இந்தியப் பொலிசார் அகற்ற முற்பட்ட போதிலும், திரண்டு வந்த தமிழக மக்களின் உணர்ச்சிப் பெருக்கிற்கு முகங்கொடுக்கமுடியாமல் பின்வாங்கினர்.

மாநாட்டு மண்டப முன்றலிலே விற்பனைக்கு வைக்கப்பட்ட தமிழீழ விடுதலை சார்ந்த கையேடுகளை, ஆர்வத்தோடு காத்திருந்த மக்கள் முண்டியடித்து வாங்கிக்கொண்டனர்.

இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி, தமிழீழ மக்களின் விடிவுகுறித்து கரிசனை கொண்டவரும், இந்திய பாதுகாப்பு அமைச்சருமான திரு ஜோர்ச் பெர்னாண்டஸ், இந்திய நிதியமைச்சர் யஸ்வந்த சின்கா, நான்கு மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள், தமிழீழ விடுதலைக்காக என்றும் குரல் கொடுத்துவரும் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் இராமதாஸ் முதலான பல முக்கிய இந்திய அரசியல் தலைவர்களும் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

உள்துறை அமைச்சர் எல்.கே அத்வானி பேசுகையில் இலங்கையில் தமிழர்கள் படும் அவலங்கள் குறித்து தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார். தமிழர்களுக்கு அமைதியான தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார். அத்வானி அவர்கள் பேசி முடித்து தனது ஆசனத்தில் அமர, மாநாட்டு மேடையில் "ஈழத்தமிழர்களுக்கு தமிழீழமே தீர்வு, தீர்வு" என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் ஆணித்தரமாக தமிழீழ மக்களின் தேவையை அத்வானி அவர்களுக்கு உணர்த்தினார். மேலும் 1988 ஆம் ஆண்டு தமிழீழ ஆதரவாளர் மாநாட்டில் கலந்துகொண்ட தற்போதைய பிரதமர் வாஜ்பாய் ஆற்றிய உரையினை மேற்கோள் காட்டியும் தமிழீழ விடுதலைக்கு வலுத்திரட்டினார். இந்தியப் பத்திரிகைகள் சிலவற்றின் திட்டமிட்ட தமிழீழ எதிர்ப்புப் பிரச்சாரம் குறித்து கடுமையாக சாடவும் அவர் தவறவில்லை. தமிழீழத்திற்கு எதிராக கதைப்பதற்கு. இவ்விரோதிகளுக்கு பேச்சுரிமையும் எழுத்துரிமையும் இருக்கும்போது, தமிழீழத்திற்கு ஆதரவாக பேசவும் எழுதவும் தமக்கு இருக்கின்ற உரிமையை யாரும் தடுக்கமுடியாதென அவர் அங்கு வலியுறுத்திக்கூறினார். தமிழீழம் இந்தியாவின் முதல்தர நட்பு நாடாக இருக்கும் என்பதை மக்களின் ஏகோபித்த கரகோசத்திற்கு மத்தியில் தெரிவித்தார். தமிழீழத்தை யாரும் உருவாக்க வேண்டியதில்லை. அது அங்கு தானாகவே உருவாகும். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்றார். திரண்டிருந்த கூட்டம் கையொலியாலும் வாழ்த்துக் குரலாலும் ஆமோதித்தது.

மொத்தத்தில் ம.தி.மு.க மாநாட்டில் தமிழீழமும் பிரபாகரனுமே நிறைந்திருந்தார்கள் என்று இந்து பத்திரிகை பொருமி எழுதும் அளவிற்கு தமிழக மக்கள் தமது தமிழீழ ஆதரவை இம்மாநாட்டில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். ■

# எமது மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தி நமது மக்களிடமே !



சந்திரிகா அரசின் பொய்மை உலகத்தை சுற்றிவரும் வரை காத்திருந்து விடுதலைப் புலிகள் பேசியிருக்கின்றனர். தற்போதைய இராணுவ அரசியல் இராஜதந்திர நகர்வுகள் பற்றிய பரபரப்பான செய்திகள் வதந்திகளுக்கு பதிலிறுக்குமாப்போல் தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வழங்கிய செவ்வியை இங்கு தருகின்றோம்.

**கேள்வி:-** யாழ்ப்பாணத்தில் சண்டை ஓய்ந்துபோய் இருக்கிறது. சிங்கள ஆயுதப் படைகள் நவீனரக ஆயுதங்களைப் பாவிப்பதன் விளைவாகவே விடுதலைப் புலிகளின் தாக்குதற் சமர் நிறுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில்:-** விடுதலைப் புலிகளின் தாக்குதற் சமர் இராணுவத்தால் நிறுத்தப்படவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில், தாம் கைப்பற்றிய பிரதேசங்களை எமது விடுதலைப் போராளிகள் பலப்படுத்தி, நிலைப்படுத்தி வருகிறார்கள். சாவகச்சேரிப் பகுதியில் போர் நிகழ்ந்த இடங்களில் சிக்குண்டு தவிக்கும் எமது மக்களை பாதுகாப்பான இடங்களிற்கு அப்புறப்படுத்தும் நோக்கிலேயே எமது போர் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. சிங்கள இராணுவம் இப் பகுதியில் அப்பாவிப் பொது மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியது மட்டுமன்றி, கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியும், விமானக் குண்டுவீச்சுக்களை நிகழ்த்தியும் பெரும் தொகையானோரை கொன்றொழித்தும் படுகாயப் படுத்தியும் உள்ளது. மனவுறுதி தளர்ந்த நிலையில் இருக்கும் இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் ஒரு பொழுதும் ஓய்ந்துவிடப்போவதில்லை. எமது போரின் இலட்சியம் நிறைவெய்தும் வரை அலைகள் ஓயாது. அதாவது, யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையாக அந்நிய இராணுவ ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெறும் வரை ஓயாத அலைகள் ஓய்ந்துவிடாது.

**கேள்வி:-** பல குழல் ஏவுகணைச் செலுத்திகள் போன்ற நவீனரக ஆயுதங்கள் பாவிக்கப்படுவதால் விடுதலைப் புலிகள் தரப்பில் ஏதாவது பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளனவா?

**பதில்:-** இந்த ஆயுதம் பெருமளவில் கண்மூடித்தனமாக பாவிக்கப்படுவதால்தான் பொதுசனங்கள் மத்தியில் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இதனால்தான் சாவகச்சேரிப் பகுதியில் சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வகையான ஆயுதங்கள் எம்மிடமும் இருக்கின்றன. இதனை நாம் சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் பாவிப்பதும் உண்டு. எமது போராளிகள் இந்த ஆயுதத்தின் பாவனைபற்றியும் அதன் தாக்கம் பற்றியும் நன்கு அறிவார்கள். ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆயுதங்கள் அல்ல. போரிடுபவர்களின் மனோதிடமும், உறுதியும், இலட்சியப் பற்றுமே ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இந்தப் போரியல் பண்புகள் தாராளமாக இருக்கிறது. அதனால் போரில் அவர்களுக்கே வெற்றி நிச்சயம் என்று உறுதியாகச் சொல்லலாம்.

**கேள்வி:-** வடகிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக சபையை நிறுவுவதென அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து முடிவெடுத்திருக்கின்றன. ஆயுதங்களை கீழே போட்டு, வன்முறையைக் கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கினால் விடுதலைப் புலிகளும் இதில் பங்கு கொள்ளலாம் என அரசு நிபந்தனையை விதித்திருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** இந்த அரசாங்கம் ஒரு கற்பனாவாதத்தில் மூழ்கி இருப்பதுபோலவே எனக்குத் தோன்றுகிறது. தமிழர் தாயகத்தின் 70 விகிதமான பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாடும் வெகுவிரைவில் எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எமது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் நாம் ஒரு சுயாட்சி முறையை அமைத்துள்ளோம். அங்கு ஒரு நிரந்தரமான நிர்வாகத்தை நடாத்திவருகின்றோம். நிலைமை அப்படி இருக்கும்பொழுது, ஒரு இடைக்கால நிர்வாகத்தில், ஒரு சில ஆசனங்களுக்கு போட்டியிடுவதற்காக எமது மக்களின் ஒரேயொரு பாதுகாப்புச் சாதனமான ஆயுதங்களைப் போட்டுவிட்டு, போராட்டத்தைக் கைவிடுவதற்கு நாம் என்ன வடிகட்டிய முட்டாள்களா? அப்படித்தான் அரசாங்கம் ஒரு தற்காலிக நிர்வாகசபையை உருவாக்கினாலும் இன்றைய போர்ச்சூழலில் அது இயங்குவது சாத்தியமில்லை. இந்திய இராணுவ பலத்தின் நிழலின் கீழ் கட்டி எழுப்பப்பட்ட வடகிழக்கு மாகாண நிர்வாகம் கூட செயற்பட முடியவில்லையே!

வடகிழக்கின் யதார்த்தமான கள நிலவரங்களை உதாசீனம் செய்துவிட்டு சந்திரிகா அரசு மிகவும் கேலிக்கூத்தான திட்டங்களை முன்வைக்கிறது. தனது கூட்டணி அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ்க் கூலிப் படைகளின் அதிகாரப் பசியை தீர்க்க சந்திரிகா அம்மையார் இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் சில அழுகிப் போன எலும்புத் துண்டுகளை வீசலாம். அற்ப அதிகாரங்களுக்காகவும், சலுகைகளுக்காகவும் எமது மக்களின் பேரவலத்திலும் பெரும் துன்பத்திலும் குளிர்காய்ந்தபடி ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு அடிவருடிகளாக தொண்டு புரிபவர்களின் துரோகத்தை வரலாறு ஒரு பொழுதும் மன்னிக்கப்போவதில்லை.

**கேள்வி:-** இவ்வாரம் கொழும்பில் அரசியல் நகர்வுகள் அதிகரித்திருப்பது போலத் தெரிகிறது. அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து அரச அமைப்பு சீர்திருத்தங்களின் இறுதி நகலை தயாரித்து முடித்துள்ளன. அதே சமயம் நோர்வேயின் சமாதானத் தூதரான திரு.எரிக் சுல்கைம் அரச தலைவர்களைச் சந்தித்திருக்கிறார். ஆனால் புலிகள் தரப்பிலோ மௌனம் சாதிக்கப்படுகிறது. அதிகாரப் பரவலாக்கப் பொதி சம்மந்தமாக உங்களது நிலைமை என்ன? அந்தப் பொதி உங்களுக்கு கையளிக்கப்பட்டால் அதனை நீங்கள் பரிசீலனை செய்வீர்களா?

**பதில்:-** அரசாங்கத்தின் இந்த அதிகாரப் பரவலாக்கப் பொதி 1995ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதும் முதன் முதலாக அதனை நிராகரித்தவர்கள் விடுதலைப் புலிகளே. அந்தப் பொதியில் பல குறைபாடுகள் இருந்ததாலும், அது [illegible] அபிலாசைகளை நிறைவு செய்யத் தவறிய காரணத்தினாலும் நாம் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தோம். அதன்பின்னர் 1996ஆம் ஆண்டிலும் பின்னர் 1997ஆம் ஆண்டிலும் இந்தப் பொதி புதிய வடிவில் வெளியிடப்பட்டது. ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட யோசனைகள் மாற்றம் செய்யப்பட்டு அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டதாகவே இறுதித் திட்டம் அமைந்தது. இதனையடுத்து கடந்த பல மாதங்களாக மக்கள் கூட்டணி அரசாங்கமும் எதிர்க்கட்சியுமாக இணைந்து இந்த அரச அமைப்புப் பொதியில் பல சீர்திருத்தங்களை கொண்டுவந்துள்ளன. இதன் மூலம், மூல நகல் திட்டத்திலிருந்த இரத்தமும் சதையும் உருவி எடுக்கப்பட்டு இறுதி நகலாக ஒரு எலும்புக்கூடு தான் எஞ்சியிருக்கிறது.

இந்தப் பொதியை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இதில் எவ்விதமான உருப்படியான அதிகாரப் பரவலாக்கமும் இருக்கவில்லை. தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு இது ஒரு அடித்தளமாகவும் அமையப்போவதில்லை. திம்புக் கோட்பாடுகளாக பிரகடனப்படுத்தப்பட்ட தமிழரின் தேசிய அபிலாசைகளையோ, அடிப்படைக் கோரிக்கைகளையோ இந்தப் பொதி தொடக்கூடவில்லை. தமிழ் மக்களின் தன்னாட்சியுரிமை, தேசியத் தாயகம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளை உதாசீனம் செய்யும் இந்தப் பொதியையும், தீர்வுத்திட்டத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம் பரிசீலிக்கத் தயாராக இல்லை.

அரசாங்கத்தின் இந்தப் புதிய அரச அமைப்புச் சீர்திருத்த யோசனைகள் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை தீர்க்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்படவில்லை. பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நலன்களைப் பேணும் நோக்கில்தான் இந்தப் புதிய அரசமைப்புத் திட்டம் கொண்டு வரப்படுகிறது. சிறீலங்காவில் எத்தனையோ அரசமைப்புத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் இவையொன்றும் தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையவில்லை. அரசியல் கட்டமைப்பை புரட்சிகரமாக மாற்றியமைக்கும் வகையில் சீரமைப்புக்கள் செய்யப்படாதவரை புதிய அரசமைப்புத் திட்டங்களில் பயனுமில்லை, அர்த்தமுமில்லை.

**கேள்வி:-** கூடிய விரைவில் போர் நிறுத்தமும் சமாதானப் பேச்சுகளும் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா?

**பதில்:-** யாழ்ப்பாணக் குடாநாட்டை ஆக்கிரமித்து நிற்கும், சிங்களப் படைகள் வெளியேற்றப்பட்டால் போர்

தொடர்ச்சி [illegible] பக்கம்

# எமக்கு இந்திய மக்களின் ஆதரவு தேவைப்படுகின்றது

-திரு. அன்ரன் பாலசிங்கம்-

(தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்திய பிரபல ஆங்கில நாளேடான டெக்கான் ஹெரால்டுக்கு 06.07.00 அன்று வழங்கிய செவ்வியின் சாரம் வருமாறு)

- இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் இந்தியா முக்கிய பங்கை வகிக்க வேண்டும். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவில் தடை செய்யப்பட்டு இருக்கும் வரை இந்தியா இப்பங்கினை வகிக்க முடியாது.
- இப்பிராந்தியத்தில் இந்தியாவின் வல்லாண்மையையும் முக்கியத்துவத்தையும் நாம் நன்கறிவோம். எமது அமைப்பின் மீதான தடையை இந்தியா நீக்குவதற்கான காலத்தை நாம் எதிர்பார்த்துக் காத்து நிற்கிறோம். இந்தியாவுடன் புதிய நல்லுறவைப் பேண விடுதலைப் புலிகள் ஆவலாக உள்ளார்கள்.
- விடுதலைப் புலிகளின் போராட்டம் இந்திய நலன்களுக்கு அச்சுறுத்தலாக ஒருபோதும் அமையவில்லை.
- எமது விடுதலைப் போராட்டமானது இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களுக்கு விரோதமாக நாம் செயற்படப் போவதில்லை. இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் நாம் தலையிடப் போவதில்லை என்பதையும் தெளிவாக ஏற்கனவே தெரிவித்துள்ளோம். தனியரசு கோரி தமிழீழ மக்கள் நடத்திவரும் சுதந்திரப் போராட்டம் தமிழ்நாட்டில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென இந்தியாவில் ஒரு அச்சம் நிலவி வருகின்றது. இதுவொரு [illegible] பயமாகும். இந்தியா ஒரு சமஷ்டி அமைப்பான நாடு. எமது மக்கள் இலங்கையில் எதிர்கொள்வது போல் இந்தியத் தமிழர்கள் கொடூரமான ஒடுக்கு முறையை எதிர்கொள்ளவில்லை. தமிழ்நாட்டில் பிரிவினைக்கான கோரிக்கை இருக்கவில்லை. ஆனால் எமது போராட்டமும் அதற்கான புறநிலைகளும் முற்றிலும் வேறுபட்டது. எமக்கு இந்தியாவின் நட்புறவு தேவைப்படுகின்றது. இந்திய மக்களின் ஆதரவு தேவைப்படுகின்றது.
- தற்போது இந்தியா சிறீலங்கா அரசாங்கத்திற்கு உதவுகின்றது. ஆனால் ஈழத்தமிழர்களுக்கு இந்தியத் தமிழர்களிடம் எவ்வித தொடர்பும் இல்லை.
- சில இந்திய செய்தி ஊடகங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் கண்டன விமர்சனங்களை முன்வைக்கின்றன. ஈழத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இனக்கொலை வடிவிலான ஒடுக்குமுறையை இவ்வூடகங்கள் உதாசீனம் செய்துவருகின்றன. ■



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை, நெருக்கடியிலிருந்து விடுபட ஒரு நிவாரணி?

தமிழீழத்திலிருந்து
-வேலவன்-

இந்திய மத்திய அரசின் உயர் பிரதிநிதியின் வருகையை அடுத்து மீண்டும் ஓர் ஏமாற்று நாடகத்தை அரங்கேற்ற சிங்கள இனவாதம் தயாராகிவிட்டது போல தோன்றுகிறது. அதாவது ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தத்துக்குப்பின் அமைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபைபோன்று மீண்டும் ஒரு இடைக்கால நிர்வாகசபையை அமைக்கப்போவதாக சிங்கள அரசு செய்தி ஒன்றை பரவவிட்டிருக்கிறது.

இது தொடர்பாக வெளிவந்திருக்கிற செய்திகள் "தமிழர் வாழும் மாகாணங்களுக்கு பிராந்திய சுயநிர்வாகம் வழங்குவதற்காக வரையப்பட்டு வரும் அரசியல் சாசனத்திருத்தத்தை இறுதி செய்வதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக இது அமையும்" என கூறுகின்றன. அத்துடன், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு வருகை தந்து இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை விரைவுபடுத்துமாறு கேட்டுக் கொண்டுவிட்டு இந்தியா திரும்பிய மறுநாளே, சந்தித்த சிறீலங்காவின் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் எடுத்த முடிவு இது என்றும் செய்திகள் கூறுகின்றன.

அதாவது இந்திய வெளிவிவகார அமைச்சர் சிறீலங்காவுக்கு வருகை தந்து நிரந்தரமான சமாதானத்தீர்வு ஒன்றைக் காணுவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு கூறிச்சென்ற பின்னரும் இடைக்கால தீர்வொன்றையே ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து அறிவித்திருக்கிறது.

இந்த இடைக்கால சபை எவ்வாறு அமையப்போகிறது? இதில் பங்கேற்கப் போவது யார்? என்பது குறித்த விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால் இடைக்கால நிர்வாகசபை பற்றி பேசுவது என்பது புதிய விடயமல்ல, தவிர இடைக்கால நிர்வாகசபையொன்று அமையுமாயின் அதன் முடிவு என்னவாகும் என்பதும் ஊகிக்கக்கூடியதே.

முதலாவதாக, ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம் ஏற்பட்ட பின் அமைக்கப்பட்டது போன்று மீண்டும் ஓர் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்போவதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த ஒப்பந்தத்தின் பின் இடைக்கால நிர்வாக சபை ஒன்று அறிவிக்கப்பட்டதே தவிர அது செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அந்த இடைக்கால நிர்வாக சபையின் பிரதம நிர்வாகியை தெரிவு செய்யக்கூட தமிழர் தரப்புக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அதன் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள், இந்திய - புலிகள் யுத்தத்திற்கும் வழிவகுத்தன. அதன்பின்னர் இடைக்கால நிர்வாகசபை என்ற விடயமே கைவிடப்பட்டது.

பின்னர் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பெரும் படையெடுப்பு ஒன்றை நடத்தி யாழ் குடாநாட்டைக் கைப்பற்றிய பின், ஓர் இடைக்கால நிர்வாக சபையை அமைக்க வேண்டும் என ஈ.பி.டி.பி குழு இடையறாது கோரிக்கை விடுத்து வந்தது. ஆனால் வலிகாமத்தை ஆக்கிரமித்தபோது யாழ். நிர்வாகம் தமிழர் வசம் ஒப்படைக்கப்படும் எனக் கூறிய சந்திரிகா யாழ் குடாநாடு முழுவதையும் ஆக்கிரமித்தபின்னர் தனது அரசுக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் கையுயர்த்தும் தமிழ்க் குழுக்களைக்கூட அங்கு அனுமதிக்க மறுத்துவந்தார். யாழ் குடாநாட்டில் வாழும் மக்கள் இந்தக் குழுக்கள் அங்கு வருவதை விரும்பவில்லை என்றும், தனது இராணுவத்தின் பாதுகாப்பிலேயே வாழ விரும்புவதாகவும் அதற்கு காரணமும் கூறினார்.

பின்னர் யாழ் குடாநாட்டிலே "ஜனநாயக" அமைப்புகள் செயற்படுவதாக உலகிற்குக் காட்ட வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டபோது உள்ளூராட்சி தேர்தலை நடத்த திட்டமிட்டார். இவ்வேளையில் அத்தேர்தலில் போட்டியிட தயங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட சில தமிழ்க் குழுக்களை கவர்வதற்காக இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் அவர் வெளியிட்டார். இந்த இடைக்கால நிர்வாகசபையில் பங்கேற்கக்கூடிய உறுப்பினர்களின் பெயர்களை சிபார்சு செய்யுமாறு தமிழ்க் குழுக்களிடம் அவர் கேட்டும் இருந்தார்.

அத்துடன் கூடியளவு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கைவசம் வைத்திருந்த ஈ.பி.டி.பி குழுவிற்கு ஆசை காட்டும் விடயமாக இடைக்கால நிர்வாகசபையின்



தலைமைப் பொறுப்பு என்ற 'கரட்'டையும் அவர் தொங்கவிடத் தவறவில்லை.

ஆனால் இறுதியில் இனப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு தன்னால் விரைவிலேயே அரசியல் சீர் திருத்தங்கள் வெளியிடப்படவுள்ள நிலையில் இடைக்கால நிர்வாகசபை செயற்படக் காலம் போதாது எனக் கூறி டக்ளஸின் முகத்தில் பட்டைநாமம் போடவும் அவர் தவறவில்லை.

இவ்வாறு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவாக இருந்தாலென்ன பிரேமதாஸாவாக இருந்தாலென்ன அல்லது ஏனைய பௌத்த பேரினவாதிகளாக இருந்தாலென்ன இவ்வாறான அமைப்பு ஒன்றை அமைப்பதற்கு மறுத்தமைக்குக் காரணம் வடக்கு-கிழக்கு இணைந்த எந்தவகையிலான ஒரு அமைப்பும், வடக்கு-கிழக்கு இணைப்பை அதாவது தமிழர் தாயக கோட்பாட்டைப் பலப்படுத்திவிடும் என்பதனாலாகும்.

இவ்வாறான ஒரு சபையை அல்லது அமைப்பை ஏற்படுத்த சிங்களப் பேரினவாதம் அனுமதிக்காது என்பதற்கு பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம் என்பவற்றின் தொடர்ச்சியாக ராஜீவ்- ஜே.ஆர் ஒப்பந்தமும் இருக்கிறது. இதனைவிட ஜே.ஆர் அமைத்த மாவட்டசபைக்கும் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபைக்கும் ஆட்சியாளர்களே அதிகாரங்களை வழங்காது புறக்கணித்தனர்.

இவ்வேளைகளில் ஆளும் கட்சிக்குள் ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டு செய்து கொண்ட ஒப்பந்தங்களை எதிர்க் கட்சிகள் முறியடித்தன. ஆனால் இம்முறை இருபிரதான கட்சிகள் இணைந்துள்ளன.

ஆனால் அவற்றின் குறிக்கோள்களில் இன்றும் மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்பதை இப்பொழுது கிடைக்கும் தகவல்கள் உறுதி செய்கின்றன. அதாவது இந்த இடைக்கால நிர்வாகசபை குறித்த அறிவிப்பு மட்டுமே வெளிவந்துவிட்ட நிலையில் வடக்கு-கிழக்கு இணைந்த இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தமிழ்க் குழுக்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும், கிழக்கு மாகாணம் தனியாக இருக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கூறுவதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

அத்துடன் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பு நடத்தியது என்பதன் அடிப்படையிலேயே இந்த இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட விருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் கூறியிருக்கின்றார்.

இது ஒருபுறமிருக்க ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து புலிகளுக்கு நாட்டின் ஒரு பகுதியின் அதிகாரங்களை வழங்கிவிடப் போவதாக இனவாத சக்திகளின் கூக்குரல்கள் ஆனையிறவுத் தோல்வியின் பின் உச்சஸ்தாயிக்குச் சென்றுள்ளது.

"பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம்" சிங்கள வீரவிதான, பௌத்த மகாசங்கங்கள், ஒன்றியங்கள், பீடாதிபதிகள், என்ற வரிசை நீண்டுசென்று "சிஹல உறுமய" எனும் புதிய கட்சியொன்று சிங்களவரின் உரிமைக்காக என போர்க்கொடிதூக்கி நிற்கிறது.

இவற்றுக்கும்மேலாக ஒரு வருட காலத்திற்குள் "பயங்கரவாதத்தை" ஒழிக்கவென சிறீலங்காவின் ஆளும் கட்சி மற்றும் ஐ. தேசிய கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து புதிய அமைப்பொன்றை உருவாக்கியுள்ளனர்.

இது குறித்து கருத்துவெளியிட்ட சிறீலங்காவின் கற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த விஜயசேகர நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் படையினருக்கு சக்தியை வழங்க இருகட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென கூறியிருக்கிறார்.

இவ்வாறான நிலையில், இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம், அதன் பின்னர் அமைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை என்று சிறீலங்காவின் ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து போடும் நாடகத்தின் நோக்கம் தமிழரை ஏமாற்றுவதல்ல, இந்தியாவை ஏமாற்றும் முயற்சியே என துணிந்து கூறலாம்.

ஏனெனில் ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து ஒரு நிரந்தரத் தீர்வை முன்வைக்க வேண்டும் என வலியுறுத்தும் இந்தியாவை, இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தின் வழிமுறையில் தாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக காட்டி ஏமாற்றுவதே அவற்றின் நோக்கமாகும். அதாவது கடந்தமுறை ஐ. தே. கட்சியிடம் மட்டும் ஏமாந்த இந்தியா இம்முறை இரண்டு பிரதான கட்சிகளிடமும் ஏமாறப் போகிறது என்பதே இதன் பொருளாகும். அதற்கு வாய்ப்பாக முஸ்லிம் காங்கிரஸின் எதிர்ப்பை அது பயன்படுத்திக்கொள்ளும்.

அத்துடன் இடைக்கால நிர்வாகசபை குறித்த அறிவிப்பானது நிரந்தரத் தீர்வுக்கு என அரசாங்கம் அறிவிக்க வேண்டிய தீர்வுத் திட்டத்தைத் தள்ளிப்போடவும் உதவும்.

எனவே சிங்களப் பேரினவாதத்துடன் மூலோபாயம் மாற்றமடையாத நிலையில் இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு என இந்திய அரசு ஆயினும் சரி, உலக நாடுகள் எவையாயினும் சரி கூறிக்கொண்டிருப்பது தமிழ் மக்களின் துயரங்களை நீடிக்க மட்டுமே உதவக் கூடியதாக இருக்கும். ஏனெனில், இரு இன மக்களும் மனோ ரீதியாகப் பிரிந்து ஆண்டுகள் பல கடந்து விட்ட நிலையில் இறுதி முடிவு அதற்கு மாறாக இருக்கும் என கூறிவிட முடியாது. ■


## புலம்பெயர்ந்துவாழும் தமிழீழ மக்களே!

தமிழீழம் எங்களின் தேசம் வளம் நிறைந்த பூமி. மீட்கப்பட்ட எமது தமிழீழ தேசம், பொருண்மிய வளம் மிக்க நாடாகத் திகழ வேண்டுமல்லவா!

ஆகவே, அதற்கான வேலைத்திட்டங்களை வகுத்து, அதனை முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிலையில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உள்ளது. இந்த தேசமுன்னெடுப்புப் பணி, பாரம் நிறைந்தது. சிலரின் உழைப்பில் சாத்தியப்படும் பணியல்ல.

அதனால், ஆர்வமுள்ள தொண்டர்களின் பரந்துபட்ட பலம், உழைப்பு தேவைப்படுகின்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனது வேலைத் திட்டங்கள் பலவற்றை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஆர்வமுள்ள தொண்டர்களை வேண்டி நிற்கின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து, தாயகத்திற்கு பொருண்மிய வலுவூட்ட எல்லோரும் இணைந்து செயற்படுவோம். மேலதிக விபரங்களைப் பெற்று உங்கள் கடமையை ஆற்ற உங்கள் நாடுகளிலுள்ள, தமிழீழ விடுதலைப் புலிகளின் பணியகங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



# உலகின் கவனத்தை தமிழர் பக்கம் ஈர்த்துவிட்ட ஆனையிறவு வெற்றி

**தமிழீழத்திலிருந்து**
**-கெல்மன்-**

யாழ் குடாநாட்டை சிறீலங்கா இராணுவத்திடமிருந்து கைப்பற்றும் நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள்-03 என பெயரிட்டு ஆரம்பித்து செயற்படுத்தி வரும் தாக்குதல் நடவடிக்கையானது இலங்கை இனப்பிரச்சினை உலக விவகாரமாகியுள்ளதைப் போன்று உலக நாடுகளின் கவனம் இலங்கையின் பக்கம் திரும்பியுள்ளது.

இலங்கையிலேயே மிகப் பலமான இராணுவத் தளம் என சிறீலங்கா இராணுவ அதிகாரியான மேஜர். ஜெனரல் சரத் முனசிங்காவால் கூறப்பட்ட ஆனையிறவு பெருந்தளம் விடுதலைப் புலிகளின் படையணிகளால் தாக்கி கைப்பற்றப்பட்டதை அடுத்தே உலகின் கவனம் மிக அக்கறையுடன் தீவிரமடைந்துள்ளது.

'இலங்கை இனப்பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை அதில் வெளியார் தலையீடு அவசியமில்லை' என்ற நிலைப்பாட்டினையே சந்திரிகா அரசாங்கம் முன்னர் கடைப்பிடித்துவந்தது. இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தும்போது ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளுடன் சிறீலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரிற்கு சில நெருக்கடிகள்கூட கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்தது. இந்த வகையில் வெளியாரின் தலையீடு அவசியமில்லை என்ற நிலைப்பாடு சிறீலங்காவைப் பொறுத்து இறுக்கமானதாகவே இருந்தது. இவர்களின் இந்த நிலைப்பாட்டிற்கும் ஆதிக்கவெறியே காரணமாக இருந்துள்ளது. அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடானது புதிய உலக அரசியல் ஒழுங்கின்படி சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் அதிகாரப் பகிர்வுகள் உயர்ந்த பட்சமாகவே இருக்கமுடியும். இதை சிங்களப் பேரினவாதம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.

இந்த வகையிலேயே மேற்கு நாடுகள் மத்தியஸ்தத்திற்கு வரும் பட்சத்திலும், தங்களது மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உயர்ந்த பட்ச அதிகார எல்லைகளைப் பற்றியே பேச வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். இதுவும் சிங்கள ஆட்சியாளருக்கு ஏற்புடையதாய் இல்லாததால் வெளியாரின் தலையீடு தேவையில்லை. இது உள்நாட்டுப் பிரச்சினை என்ற ரீதியில் அவர்களின் முயற்சிகளை எல்லாம் நிராகரித்தது.

ஆனால் சந்திரிகா அரசாங்கம் யாரை நிராகரித்ததோ அவர்களின் நிதி உதவி மட்டும் யுத்தத்திற்கு தேவைப்பட்டது. இதை வருடா வருடம் பெறுவதற்காகவே பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டினை தன்னுடைய அரசாங்கம் கொண்டுள்ளதாகக் காட்டிக் கொண்டு வந்தது. பேச்சுவார்த்தை மத்தியஸ்தம் என்ற விடயங்கள் நெருக்கமாக வரும் சந்தர்ப்பங்களில் புலிகள் விரும்புகின்றார்கள் இல்லை, இதனால் அவர்களது இராணுவப் பலத்தை இல்லாது செய்து அல்லது புலிகளை அழித்த பின்னர் தமிழர்களது பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு மூலம் தீர்வு காணப் போகிறேன் என சந்திரிகா அம்மையார் கூறிவந்தார். இதற்காக புலிகளை அழிக்க யுத்தத்தை வெற்றிகரமாக தான் முன்னெடுத்துச் செல்வதாகவும் அது விரைவில் முடிந்துவிடும் எனக் கூறி வந்த ஜனாதிபதி சந்திரிகா அதிகாரப் பரவலாக்கல் பற்றி தாம் அரசியல் கட்சிகளுடன் விவாதித்து வருவதாகவும் இது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் மூலமே செய்ய முடியும், இது பற்றியும் தான் ஆலோசித்து வருவதாகவும் காட்டிக் கொண்டு முழுக் கவனத்தையும் யுத்தத்தில் செலுத்தி வந்தார்.

இந்த நிலையிலேயே ஆனையிறவுப் பெருந்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகளால் வெற்றி கொள்ளப்பட்டு புலிகளின் போராட்ட வலு உலகிற்கு தெரியவந்தது. இதனையடுத்தே உலக நாடுகள் இலங்கை இனப்பிரச்சினையை அக்கறையுடன் நோக்கத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா புலிகள் தொடர்பாகவும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும் முன்னர் கூறிக்கொண்டவற்றை சாதிப்பதில் அவருக்குள்ள வீச்சின் எல்லையினை புரிந்து கொண்டதன் விளைவையே உலக நாடுகளின் இன்றைய அக்கறை பிரதிபலிக்கின்றது. ஏனெனில் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்குவதற்கு அல்லது தமிழர்களது விடுதலைப் போராட்டத்தின் தாற்பரியங்களைப் புரியாது ஒடுக்குவதற்கு [illegible] யுத்த[illegible] வழங்கிய நாடுகள்கூட புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதன் மூலமே இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும், யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது... என வலியுறுத்திக் கூறியுள்ளன. அது மட்டுமல்ல விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதற்கும் மத்தியஸ்தம் வகிப்பதற்கும் தாம் தயாராய் இருப்பதாகவும் அறிவித்துள்ளன. இதற்கான முன் முயற்சிகளை... கூட தமது தீவிர அக்கறையினை இந்நாடுகள் வெளிக்காட்டியுள்ளன.

உலக நாடுகளின் இந்த தீவிர கவனத்தை ஒரு துரும்புச்சீட்டாக பயன்படுத்தி சந்திரிகா அரசாங்கம் தமக்கு யாழ் குடாநாட்டில் தற்போது இராணுவ அரசியல் ரீதியில் எழுந்துள்ள ஆபத்துக்களிலிருந்து மீண்டுவர இராணுவ நோக்கிலான இராஜதந்திர நகர்வுகளை முடுக்கிவிட்டுள்ளது. இது உலகின் பல நாடுகளிடம் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவிபுரியுமாறு கோரும் அளவிற்கு சென்றுள்ளது. இதன் ஒரு அங்கமாக 1990 ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாசாவால் நிறுத்தப்பட்ட சிறீலங்கா இஸ்ரேல் இராஜீய உறவை ஜனாதிபதி சந்திரிகா தற்போது புதிதாக ஏற்படுத்தியுள்ளதோடு தூதுவர் மட்ட உறவு நிலையையும் பேணத் தொடங்கியுள்ளார்.

மேலும் பாகிஸ்தான் சீனா மற்றும் மேற்கு நாடுகளிடமும் உதவிக்கான கோரிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா விடுத்துள்ளதாவது இந்நாடுகளிடமிருந்து மேலும் நவீன ஆயுத கொள்வனவிற்கு வழிவகுத்துள்ளது.

இதில் எல்லாவற்றிற்கும் மேலாக வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை இந்தியாவிற்கு அனுப்பி யாழ் குடாநாட்டில் சிக்கியுள்ள இராணுவத்தினரை மீட்பதற்கும் விடுதலைப் புலிகளை முறியடிப்பதற்குமாக இராணுவ உதவியைக் கோரினார். 'இலங்கை இனப்பிரச்சினையில் இராணுவ ரீதியாக தலையிடுவதில்லை என்ற இந்தியாவின் கொள்கையில் மாற்றம் இல்லை. தேவைப்படின் மனிதாபிமான உதவிகளை மட்டும் இலங்கைக்கு இந்தியா செய்யத்தயாராய் உள்ளது. மனிதாபிமான உதவி என்றால் மருந்தும் உணவும் மாத்திரமே' என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் லக்ஸ்மன் கதிர்காமருக்கு பதில் கூறியிருந்தார். ஆனால், இதனுடன் இந்தியப் பிரதமர் இப்பிரச்சினையை விட்டுவிடவில்லை. இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா எடுக்கும் நிலைப்பாட்டை மேற்கு நாடுகள் ஏற்றுக்கொள்ளும் புதுச் சூழலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதன் ஒரு அங்கமாக இலங்கை இனப்பிரச்சினையில் அக்கறை செலுத்தி வரும் மற்றும் இலங்கைக்கு உதவி வழங்குவதில் முக்கிய பங்காளிகளாக விளங்கும் மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகளுடன் இந்திய இராஜதந்திரிகள் இலங்கை இனப்பிரச்சினை பற்றியும் அதன் தற்போதைய வளர்ச்சிக் கட்டம் பற்றியும், அதைத் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகள் அதில் தாம் ஆற்றக்கூடிய பங்களிப்பு பற்றியும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர். இதில் நேர்வே வெளிநாட்டமைச்சர் புதுடில்லிக்கு விஜயம் செய்து இந்திய இராஜதந்திரிகளுடன் உரையாடியதும் அமெரிக்க அதிபர் பில்கிளின்டன் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் இலங்கை இனப்பிரச்சினை பற்றி தொலைபேசியில் உரையாடியதும், கனடாநாட்டு இராஜதந்திரிகள் மூவர் புதுடில்லிக்கு விஜயம் செய்து இலங்கை இனப்பிரச்சினை பற்றி கலந்துரையாடியதும், மற்றும் ஐரோப்பிய யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளின் இராஜதந்திரிகள் கலந்துரையாடியதையும் குறிப்பிட முடியும். இதிலும் முக்கியமாக அமெரிக்க அதிபர் தமது வெளியுறவுத்துறை அமைச்சின் தென்னாசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் போல் இன்ரபேட்டை விசேடமாக புதுடில்லிக்கு அனுப்பி இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஆராய்ந்துள்ளார்.

இந்தியாவின் இந்த இராஜதந்திர முயற்சிகளின் ஒரு கட்டத்திலே இந் நாடுகளில் சில இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்த்தி அறிக்கைகள் வெளியிட்டும் உள்ளன.

இந்த வகையில் பார்க்கையில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் உலக நாடுகள் பலவற்றின் கவனத்தையும் ஒட்டுமொத்தமாக கவர்ந்துள்ளது. அதாவது உள்நாட்டுப் பிரச்சினை எனச் சிறீலங்கா அரசு வகுத்திருந்த எல்லைகளை உலக நாடுகள் இன்று ஏற்றுக்கொள்ளவோ, அனுசரிக்கவோ தயாராக இல்லை.



ஆனால் இன்று இனப்பிரச்சினைத் தீர்விற்கு இந்தியாவின் பங்களிப்புகள் பற்றியே அநேக நாடுகள் பேசினாலும்கூட, இவ் விவகாரத்தை இந்தியா எவ்வாறு கையாளப்போகின்றது என்பதைப் பொறுத்தே இப்பிரச்சினை அதனால் கையாளக்கூடிய விடயமா என்ற முடிவிற்கு வர இயலும். அவ்வாறு இந்தியாவால் முடியாவிடின் இதன் சர்வதேச முக்கியத்துவம் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் எனத் துணிந்து கூறலாம். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# "எமது போராட்டத்திற்கூடாகவே எமது விடுதலையைத் தேடிக்கொள்ள வேண்டும்"

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



**வரலாற்றுப் பெருமைமிக்க ஆனையிறவு வெற்றியை கருப்பொருளாக வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் பாடல் ஒலிப்பேழை ஒன்றும், கவிதைத் தொகுதி ஒன்றும் கடந்த 03.07.00 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது இந்நிகழ்வின்போது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆற்றிய உரை வருமாறு.**

எமது தலைவரின் வழியிலே இந்த விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மலர்ந்து, முனைப்புப் பெற்ற காலத்தில் இருந்தே மிக ஆழமாக இந்த ஆனையிறவுத் தளத்தை மீட்டெடுக்க வேண்டும். இந்த ஆனையிறவுத் தளத்தில் இருக்கின்ற ஆக்கிரமிப்பு அரக்கன் அழித்து ஒழிக்கப்பட வேண்டும், என்பதில் எங்களுடைய தலைவர் மிக உறுதியாக இருந்தார். அதன் முதற்படியாக 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆனையிறவு மீட்பிற்கான ஒரு சமர் தொடங்கியது. ஆனையிறவை முற்றுகைக்கு உட்படுத்தி அதற்கான விநியோகங்களை எல்லாம் துண்டித்த நிலையில் ஆனையிறவு படிப்படியாக வீழ்ச்சியுறும் நிலை தோன்றியது. அது அன்றைய காலகட்டத்திலேயே அரசியல் இராணுவ ஆய்வாளர்களினால் பெரும் அதிர்ச்சியோடும் வியப்போடும் பார்க்கப்பட்ட விடயம். எமது வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்திலேயே ஆனையிறவுத் தளத்தை மீட்பதற்கான ஒரு பெரும் சமரை தலைவர் தொடக்கியிருந்தார். அன்று அந்தச்சமர், எங்கள் போராட்ட வரலாற்றிலே பெரும் படிப்பினைகளையும் திருப்பங்களையும் ஏற்படுத்தக் காரணமாக இருந்தது. அன்று அந்தச்சமர் வெற்றியடைய முடியாததற்கு எடுத்துக் கொண்ட பாடமாக, கடற்படையை கட்டியெழுப்ப வில்லை என்பது இருந்ததென எமது தலைவர் கூறுவார்.

எமது கடல் வலிமையை வளர்த்தெடுக்க வேண்டும் என அன்றே தலைவர் முடிவெடுத்தார். அன்றிலிருந்து தலைவரவர்களின் நேரடிக் கண்காணிப்பிலும், நேரடிக் கவனிப்பிலும் கடற்புலிகள் அணி பெருவளர்ச்சி கண்டது. ஆரம்பத்தில் சிறுசிறு தாக்குதல்களை கடலில் மேற்கொண்டு சிறீலங்கா அரசின் கடற்படையை பலவீனப்படுத்தி, எமது கடற்சண்டை அனுபவங்களை வளர்த்தெடுத்து, எமது கடற்புலிகளை தலைவர் கட்டியெழுப்பினார். அன்று சிறீலங்கா இராணுவத்தின் தோல்வியை ஆனையிறவில் தடுத்து நிறுத்த எது துணை நின்றதோ இன்று ஆனையிறவில் இராணுவத்தின் படுதோல்விக்கு எமது தலைவரால் கட்டியெழுப்பப்பட்ட கடற்புலிகளின் வளர்ச்சி முதன்மையான பங்கை வகித்தது.

சென்ற ஆண்டின் நடுப்பகுதியிலே இந்த வன்னி மண்ணிலே நாம் மிகவும் [illegible] இராணுவம் பெரிய படையெடுப்புக்களை நடாத்தி வன்னி மண்ணின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து நின்றது. அன்று எமது தலைவர், எமது மக்களுக்கு தனது திட்டங்களைக் கூறி, எதிர்காலத்தில் ஏற்படப்போகும் திருப்பங்களுக்கு ஏற்ற தயார்ப் படுத்தல்களை செய்யும்படி எமக்குப் பணித்திருந்தார். நாம் அதனை மக்களுக்கு விளக்கினோம். அந்தச் சூழலில் எமது மக்கள் அனைவரும் முன்வந்து எமது நிரந்தரப் படையை வலுவாக்கியதும், எமது எல்லைப் படைகளை உருவாக்கி இந்தப் போர்ப் பணியிலே மக்களும் பங்காற்றிய தன்மைதான் கடந்த ஒரு ஆண்டில் நாம் பெற்ற வெற்றிகளுக்கு காரணமாக இருந்தது. ஆகவே எமது மக்களாற்றிய பங்களிப்பும் எமது மக்களின் போர்ப்பணிச் செயற்பாடுகளும் இன்று எமக்கு பெரு வெற்றிகளை ஈட்டித்தந்தன. ஆனையிறவு வெற்றியும் ஓயாத அலைகள் மூன்றில் நாங்கள் பெற்ற வெற்றிகளும் உலக அரங்கிலே எமது விடுதலைப் போராட்டத்திற்கான அங்கீகாரம் கிடைக்கின்ற சூழ்நிலையையும் அனைவரும் இந்தப் போராட்டத்தை தமிழர்களது இந்த அவலத்தை இந்த விடுதலைக்கான போராட்டத்தை திரும்பிப் பார்க்க வைக்கின்ற நிகழ்வுகளாக அமைந்திருக்கின்றன.

இங்கே நடக்கின்ற பெரும் மனித உரிமை மீறல்களையும் பெரும் அவலங்களையும் உள்நாட்டுப் பிரச்சனையெனப் புறந்தள்ளியது வெளியுலகம். ஆனையிறவு வெற்றிக்கு பின்னாலேதான் இதையொரு சர்வதேசப்பிரச்சனையாக, இதை தமிழர்களுக்கு எதிராக நடக்கின்ற இன ஒடுக்குமுறையாகப் பார்த்து இங்கே நேரடியாகத் தலையிடுகின்ற நிலைமைக்கு சர்வதேச சமூகம் தள்ளப்பட்டது.

எமது மக்கள் காட்டிய பங்களிப்பும் எமது தலைவரின் சிறந்த திட்டமிடலாலே ஏற்படுத்திய இராணுவச்சாதனைகளும், பெரு வெற்றிகளுமே இதற்கு காரணமாகும். எமது தலைவர் கூறுவது போல எமது தலைவிதியை நாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டும், நாமே எம்மை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். நாமே எமது விடுதலையை நிர்ணயிக்க வேண்டும் என்ற எமது தலைவரின் விருப்பத்தை எமது மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு ஆற்றிய பங்குதான் இந்த மாற்றத்திற்கும் இந்த வளர்ச்சிக்கும் [illegible] எமது போராட்டத்திற்கு ஊடாகவே விடுதலையைத் தேடிக்கொள்ள வேண்டும். சர்வதேச சமூகம் எமது விடுதலைப் போராட்டத்தின் தீவிரத்தையும் அதனது வெற்றியை நோக்கிய பயணத்தையும் பார்த்து திகைத்து நிற்கின்ற சூழ்நிலையிலேயே, அது சிறீலங்கா அரசிற்கு தமிழர் பிரச்சனையை தீர்க்க வேண்டும் எனக் கொடுக்கின்ற அழுத்தத்தைச் சமாளிப்பதற்காக வெளியுலகிற்கு ஒரு மாயையை ஏற்படுத்துவதற்காக அவசரமான எந்தப் பிரயோசனமுமற்ற, எமது மக்களின் அபிலாசைகளையோ எதிர்பார்ப்புக்களையோ நிறைவேற்றக்கூடிய தீர்வாக இல்லாத அவசர அவசரமாக சில அறிக்கைகளை சந்திரிகா அரசானது வெளியிட்டு வருகின்றது.

இது பெரும் பரபரப்பாக இருந்தாலும் எமது மக்களைப் பொறுத்தவரையில் வரலாற்றைக் கற்றுக் கொண்டவர்கள், தெரிந்து கொண்டவர்கள். அவர்கள் அதைவிட்டு பெரிதாக அலட்டிக் கொள்ளாவிட்டாலும் அவர்களை ஆத்திரப்பட வைக்கிற அளவிற்கு அரசின் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நாங்கள் அனைவரும் ஒன்றுபட்ட சக்தியாக அணிதிரண்டு, எங்கள் தலைவிதியை நிர்ணயிக்கின்ற பலம் பொருந்திய சக்தியாக எமது விடுதலைப் பயணம் தொடர்கின்ற சூழலில்தான் எமது வெற்றி எம்மை நோக்கி வரும். இனி ஒரு நீதியான உண்மையான தீர்வை வெகுவிரைவில் கொண்டு வருவதற்கு நாம்தான் காரணமாக இருக்க வேண்டும்.

நாங்கள் சிங்கள தேசத்திற்கும் சிங்கள மக்களுக்கும் ஒன்றை உறுதியாகக் கூறலாம். இந்த இலங்கைத் தீவில் இருக்கின்ற இரு தேசங்களின் இரு இனங்களும் சுதந்திரமாகவும் உரிமைகளோடும் வாழ்கின்ற சூழல் ஏற்படுகின்ற போதுதான் வளர்ச்சி பெற்ற சுதந்திரமான வாழ்வை தமிழரும் சிங்களவரும் மேற்கொள்ளலாம். தமிழரை அடிமைப்படுத்தி ஆக்கிரமிப்பைச் செய்துகொண்டு சிங்கள தேசம் சுதந்திரமாக மகிழ்ச்சியாக வாழலாம் என்றால் அது கனவாகத்தான் முடியும். ஆகவே இந்த யதார்த்தத்தை சிங்களதேசம் உணரும்காலம் வரும். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



# "ஆனையிறவு வீழ்ந்ததும் யாழ்ப்பாணம் யாரிடம் இருக்கும் என்பது இராணுவத்திற்குத் தெரியும்"

களமுனைத் தளபதி கேணல் பால்ராஜ்

**03.07.00 அன்று இடம்பெற்ற ஆனையிறவு ஒலிப்பேழை, கவிதை நூல் வெளியீட்டுவிழாவில் ஆற்றிய உரையிலிருந்து...**

எமது தலைவர் அவர்கள் ஜெயசிக்குறுய் ஆரம்பமாகுமுன் நம்பிக்கையுடன் கூறிய வார்த்தைகளின்படி இங்கு நிகழ்ந்ததை அனைவரும் பார்க்கின்றீர்கள். முப்படைகளை இணைத்து ஜெயசிக்குறுய் நடவடிக்கைப் படைகள் மாங்குளத்தை அடைந்தன. அப்போது கிளிநொச்சி தெரிகின்றது என அரசு கூறிக்கொண்டிருந்தது. ஒட்டுசுட்டானைப் பிடித்தபொழுது, புதுக்குடியிருப்பைப் பிடித்து துண்டாடுவோம், எமது பழைய முகாமான முல்லைத்தீவை இணைத்துவிட்டால் விடுதலைப் புலிகளின் கதை முடிந்துவிட்டது என அரசு மிகுந்த நம்பிக்கையுடன் கூறிக்கொண்டிருந்தது. ஆனால் எமக்கு, எப்படித் தலைவர் அவர்களின் திட்டத்துடன் வெற்றி பெறப்போகின்றோம் என்பது தெரியும். எப்படிச் செய்வோம் என்பதில் எமக்கு பரிபூரண நம்பிக்கை இருந்தது. அந்த இராணுவ வேலி எந்த நேரமும் அழியலாம், விழலாம் என்று நாம் குறிப்பிட்டோம். அதேபோல் படிப்படியாகப் பார்க்கலாம்.

சூரியக்கதிரின் பின் எமது விடுதலைப் போராட்டத்தின் கதை கிட்டத்தட்ட முடிந்துவிட்டது என்றார்கள். ஆனால் அதற்குப்பின் ஓயாத அலைகள் ஒன்று நடவடிக்கையில் முல்லைத்தீவில் இருந்த எதிரி நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளத் தயாராக இருந்த வேளை, நாம் தாக்குதலை ஆரம்பித்தோம் இதில் 1500க்கு மேற்பட்ட படையினரை கொன்றும் காயப்படுத்தியும் அந்த இடத்தை முழுமையாக வென்றோம். தரையிறக்கப்பட்ட இராணுவத்தையும் கொன்று காயப்படுத்தி பின்வாங்கச் செய்தோம்.

அதன்பின் ஜெயசிக்குறுய் நடந்தபோது ஓயாத அலைகள்-2 நடத்தினோம். தலைவர் அவர்களின் திட்டத்தின்படியே, எதிரி மிகுந்த நம்பிக்கையுடன் பலம்கொண்டு அமைந்திருந்த கிளிநொச்சி நகரை வென்றோம். அடுத்து ஓயாத அலைகள்-3 ஒட்டுசுட்டானில் ஆரம்பமானது. அரசு மிகுந்த நம்பிக்கையுடன் பிடித்து வைத்திருந்த பகுதிகளை குறுகிய இழப்புடன் மீட்டு படையினரை ஓமந்தை வரை விரட்டினோம்.

அடுத்த கட்டமாக ஆனையிறவினை துண்டிக்கும் நோக்குடன் எமது படைப்பிரிவுகள் தாக்குதலுக்கு தயாராகின. தலைவர் அவர்கள் இந்த திட்டத்திற்கு முன்திட்டத்தை போடும் பொழுது நாம் அனைவரும் ஒன்று சேர்ந்திருந்தோம். அந்த வேளை அவர் தீட்டிய திட்டத்தில் பரிபூரண நம்பிக்கை எமது வீரர்களுக்கும் தளபதிகளுக்கும் இருந்தது. அதேவேளை, அதில் நிச்சயமாக நாம் வெல்லுவோம் என்ற உறுதியை எமது வீரர்களும் தளபதிகளும் எடுத்துக்கொண்டோம். ஏனெனில் ஒன்பது ஆண்டுகாலம் ஆனையிறவுடன் நாம் மோதிக்கொண்டிருந்தோம். அதில் நாம் வெற்றி பெற்றிருக்கின்றோம். சில இடங்களில் தோல்வியையும் சந்தித்திருக்கின்றோம். இராணுவமும் சில இடங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது. ஆனால் ஆனையிறவு விழவில்லை.

1991 முதல் ஒன்பது ஆண்டுகால அனுபவம், ஜெயசிக்குறுய் எதிர்த் தாக்குதல்கள், எல்லாவற்றையும் பரிசீலித்து எமது தலைவர் அவர்கள் அதில் நடந்த சம்பவங்களை சரியாகக் குறிப்பிட்டு, திட்டமிட்டு எம்மைச் சரியான திட்டத்தினூடு இணைத்திருந்தார். இன்று நாம் பெரிய வெற்றிகளை ஈட்டிக் கொண்டு போவதற்குரிய காரணம் மக்களும் எமது சிறப்பு எல்லைப்படை வீரர்களும், எல்லைப்படை வீரர்களும், மகளிர் சிறப்பு எல்லைப் படை வீரர்களும், மாணவ எல்லைப் படை வீரர்களையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆனையிறவு முற்றுகைக்கான தரையிறக்க நடவடிக்கை பற்றி மிகுந்த விளக்கமாகக் கூறிய பின்பும் எல்லைப்படை வீரர்கள் உறுதியுடன் எம்முடன் வந்தார்கள். உறுதியாகவும் அர்ப்பணிப்பாகவும் மனத்திடத்தோடும் உணர்வோடும் அந்தத் தாக்குதல்களில் பங்குபற்றினர். ஆனையிறவை எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டும் என்பதில் உறுதியுடன் நின்று எம்முடன் செயற்பட்டனர்.

ஏ-9 கண்டி வீதியை நாம் ஊடறுத்து நின்றவேளையில் எல்லைப்படை வீரர்கள் எமது போராளி வீரர்களைப் போன்று தளராத உறுதியுடன், நம்பிக்கையுடன் எமது இடத்தை தக்க வைப்பதிலும் ஈடுபட்டனர். எமது விழுப்புண்பட்ட, வீரச்சாவைத் தழுவிய போராளிகளை களத்திலிருந்து அப்புறப்படுத்திலிருந்தும், எமது ஏனைய பணிகளிலும் ஈடுபட்டிருந்தும் மிகவும் உணர்வோடு அவர்கள் செயற்பட்டனர். இதன்போது அவர்கள் வீரச்சாவடைந்தனர். விழுப்புண் அடைந்தனர். எங்களுடன் நின்று எதிரியுடன் நேருக்கு நேர் யுத்தத்தில் ஈடுபட்டனர். அணிகள் குறைகின்றபோது அவர்கள் மீண்டும் எம்முடன் இணைந்தனர். தமக்கான பகுதிகளை எல்லைப்படை வீரர்கள் பாதுகாத்தனர். எமது தலைவர் அவர்களின் மதிநுட்பமான திட்டத்துடன் எதிர்பார்த்த எதிர்ப்புக்களை வெற்றிகரமாக முறியடித்தோம்.

இப்போது இராணுவம் நம்பிக்கையான கதைகளை கதைக்கின்றது. பலாலியும் ஏனைய பிரதேசங்களையும் அது பெற்றுள்ளது. அதனால் எம்மை அழிக்க முடியும் நகர்வுகளைத் தடுக்க முடியும் என அது நம்புகின்றது. நிச்சயமாக அதுவல்ல எமது பிரச்சனை. அது எமக்கு பிரச்சனைக்குரிய விடயமல்ல. அதனுடைய தாக்கங்கள் எமக்குத் தெரியும். அதில் நாம் முதலில் அனுபவம் பெற்றவர்கள். பின்புதான் இராணுவம் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே எமக்கு அது பிரச்சனை அல்ல. நிச்சயமாக எம்மால் வெல்ல முடியும்.

ஆனையிறவு வீழ்ந்ததும் யாழ்ப்பாணம் யாரிடம் இருக்கும் என்பது இராணுவத்திற்குத் தெரியும். அடுத்த கட்ட நடவடிக்கையை செய்ய இராணுவம் தயாரில்லை. அதன் மனோநிலை உடைந்துவிட்டது. அதைத்தக்க வைத்துக் கொள்ள நீண்ட காலம் தேவை.

நீண்ட காலமாக சிறீலங்கா அரச தலைவர்களில் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே கூடுதலான ஆயுதங்களைக் கைப்பற்றினோம். இராணுவம் அதிகளவில் கொல்லப்பட்டதும் இவரது காலத்திலேயே.

சந்திரிகா தொடர்ந்து இருக்க வேண்டும். நாம் தமிழீழத்தைப் பெறும் வரை அவர் இருக்க வேண்டும். ■

## ஈழத்தமிழர் நெஞ்சங்களில் ஆழப்பதிந்த

# கறுப்பு ஜூலை 1983



தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் சில துயர நிகழ்வுகள் அதன் வளர்ச்சிப் போக்கில் முக்கிய திருப்பங்களாக கணிக்கப்பட்டு விடுகின்றன. அப்படிப்பட்ட துயர நிகழ்வுகளில் ஒன்றுதான் ஜூலை 83 படுகொலைகளாகும். இக்கோரம் வெறுமனே இரு இனக்குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கலவரம் அல்ல. ஆண்டாண்டு காலமாக இலங்கைத் தீவில் வாழ்ந்து வருகின்ற தமிழ்த் தேசிய இனத்தினை இத்தீவிலிருந்து துடைத்தெறியும் நோக்கோடு, அப்போதைய சிங்கள ஆட்சியாளரினால் திட்டமிட்ட வகையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட இனப்படுகொலையே 1983 ஆடி 24இல் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகும்.

83 ஜூலை இனப்படுகொலையானது இன்றும் எம்மவர் மத்தியில் கலவரம் என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இங்கு கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் கலவரம் நடக்குமளவிற்கு எதிர்த் தாக்குதல் நடத்தப்படவில்லை. மேலும் இவ் அவலம் ஜூலை 24ஆம் திகதியில்தான் ஆரம்பமாகியது என்றும் கூறமுடியாது. இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் ஜூலை மாதத்திற்கு முன்னரேயே ஆரம்பித்து வைக்கப்பட்டுவிட்டன. அப்போதிருந்தே ஜே.ஆர் அரசு திட்டமிட்ட வகையில் பாரிய அளவில் இப்படுகொலையை நடத்தியது.

இனக்கலவரம் என்று கூறமுடியாததற்கு இன்னொரு காரணமும் உண்டு. இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் தமிழர்கள் தேடித் தேடித் தாக்கப்பட்டார்கள். ஆனால் திருப்பித் தாக்கக்கூடிய நிலையில் தமிழர்கள் அன்று இருக்கவில்லை.

ஜூலை 24ஆம் திகதி இனப்படுகொலை ஆரம்பமாவதற்கு முன்னரேயே திருகோணமலையில் வைத்து [illegible] தமிழர்கள் ஆக்கிரமிப்பு சிங்களக் காடையர்களினால் வெட்டிக் கொல்லப்பட்டனர். 40 தமிழர்களின் அவயங்கள் துண்டாடப்பட்டன. 150 தமிழ் விவசாயிகளின் வீடுகள் சூறையாடப்பட்டு எரியூட்டப்பட்டன. யாழ்ப்பாணம் மானிப்பாயில் தனியார் சிற்றூர்தியில் பயணம் செய்து கொண்டிருந்த 30 தமிழர்கள் சிங்களப் படையினரால் இறக்கிவிடப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்நிகழ்வுகள் அனைத்திற்கும் பின்னால் சிங்கள ஆட்சியாளர்களே இருந்துள்ளனர் என்பது உலகறிந்த உண்மை. இதனைப் பல சிங்களப் பத்திரிகையாளர்கள் மூடி மறைத்தபோதும் ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் இதனை அன்றே வெளிப்படுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் இனமான எழுச்சியினைக் கண்டு அச்சமடைந்த ஆட்சியாளர் அதனை அடக்குவதற்கு அப்பாவித் தமிழர்கள் மீது சிங்களக்காடையர்களை ஏவி இவ்வெழுச்சியை இல்லாதொழிக்க முற்பட்டுள்ளனர்.

இதன் ஒரு அங்கமாகவே வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஜூலை 25ஆம் திகதி நிராயுதபாணியாக நின்ற 35 தமிழ் போராளிகள் சிங்களச் சிறைக்கைதிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இருதினங்கள் கழித்து இடம்பெற்ற சிறைச்சாலைப் படுகொலையில் 17 தமிழ்க்கைதிகள் சிங்களக் காடையர்களால் குதறப்பட்டனர். இதன்போது பல தமிழ்க் கைதிகள் படுகாயமடைந்தனர். இந்நிகழ்வுகள் யாவும் சிங்கள அரசின் திட்டத்தின்படி சிங்களத்தின் சிறை நிர்வாகத்தின் அனுசரணையுடனேயே இடம்பெற்றன.


சிங்கள அரசின் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பத்திரிகையான தினமின, அரச வானொலி என்பன சிங்கள மக்களின் மனங்களின் மத்தியில் இனவாதத்தை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டன. இவை எல்லாவற்றிற்கும் உச்சமாக 1983 ஜூலை 24 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு கனத்தை மயானத்திற்கு, முதன்நாள் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளுடனான மோதலின்போது கொல்லப்பட்ட 13 இராணுவத்தின் உடலங்கள் கொண்டுவரப்பட்டு சிதைமூட்டப்பட்டன. அதிலிருந்து ஒன்றரை மணித்தியாலம் கழித்து பி.ப 4.30 மணிக்கு பொறல்ல சந்தியில் மூண்ட கொலைவெறியாட்டம் தென்னிலங்கையெங்கும் பரவலாயிற்று.

ஜூலை 24 தொடக்கம் ஓகஸ்ட் 10 வரைக்கும் 316 தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஜூலை 24-29 வரைக்கும் 1321 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. 72 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன. 281 தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். 84 தமிழ்க் குடும்பங்கள் காடையரால் உயிரோடு கொழுத்தப்பட்டனர். 79000 தமிழர்கள் தமது தாயகத்திலேயே ஏதிலிகளாக்கப்பட்டனர். இத்தரவுகள் யாவும் சிங்களத்தின் வெகுசனத் தொடர்பு சாதனங்களால் அறிவிக்கப்பட்டவை. உண்மையில் தமிழர்க்கு ஏற்பட்ட இழப்புக்கள் இதனைவிடப் பலமடங்கு ஆகும்.

பல இந்து கிறித்தவ இஸ்லாமிய வழிபாட்டுத்தலங்கள் சேதமாக்கப்பட்டன. மதகுருமார்கள் வெட்டப்பட்டும் உயிருடன் தீயிடப்பட்டும் கொல்லப்பட்டனர். இந்து ஆலயங்களின் தேர்கள் அறத்தைப் போதித்த புத்த பிரானின் சீடர்களால் தீயிடப்பட்டன. தமிழ்ப் பெண்கள் அவர்களின் கணவன்மாரிற்கு முன்னால், குழந்தைகளுக்கு முன்னால், தந்தை தாய்மாருக்கு [illegible] சிங்களக் காடையரால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டனர். தென்னிலங்கையில் வளம் கொழித்த தமிழர் தொழிற்கூடங்கள் அனைத்தும் கொள்ளையிடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன.

இவ்விதம் நடைபெற்ற சிங்கள இனவெறியாட்டத்தை "உணர்ச்சிவசப்பட்ட ஒரு இனத்தின் வெளிப்பாடு என" அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவால் இக்கொடுமையின் கோரத்தை முடிமறைக்கும் நோக்கோடும், அதேவேளை தமது இனத்தின் செயற்பாட்டை நியாயப்படுத்தி பெருமையுடன் கூறப்பட்டது. இவ்வாறு ஆண்டாண்டு காலம் சிங்களவர்களால் அடிபட்டு உதைபட்டு வதைபட்ட தமிழினம் இன்று தமிழ்த் தேசியத் தலைவரின் பின்னே "அவலத்தை தந்தவருக்கு அதனையே திருப்பிக் கொடு" என்ற தாரக மந்திரத்தை சிரமேற்கொண்டு ஆர்த்தெழுந்து நிற்கின்றது.

தமிழீழ விடுதலைப் போர் பெரும் முனைப்போடு நடைபெற்று வருகின்ற இவ்வேளையில் நிராயுதபாணிகளாக ஏதுமறியாத அப்பாவிகளாக இருந்த எமது சகோதரர்கள் சிங்களவர்களால் படு



கொலை செய்யப்பட்ட அவல நாட்களை நினைவு கூருகின்றோம். அதேவேளை இன்னமும் எமது தமிழ்ச் சகோதரர்கள் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்தும், சிங்கள இனவாதிகளிடமிருந்தும் மீட்கப்பட வேண்டிய நிலையில் உள்ளனர். எனவே இதனை நாம் நினைவிற்கொண்டு விரைந்து பணியாற்ற வேண்டிய காலமிது. ■

### துயர் தோய்ந்த நாட்குறிப்பு ஒன்றிலிருந்து

(ஈழத் தமிழர் வரலாற்றில் கோரம் நிறைந்த இச்சம்பவத்தில் அகப்பட்டு கொடூரங்களை நேரடியாகப் பட்டுணர்ந்த தமிழ் அரசஉத்தியோகத்தரின் நாட்குறிப்பிலிருந்து - ஜூலை 25.)

"எனது வீட்டிலிருந்து வேலைத்தலத்திற்கு செல்வதற்காக புறப்பட்டு பேருந்து நிலையத்தை வந்தடைந்தேன். பெரும் கூட்டமாக சிங்களவர்கள் திரண்டு நின்று தமிழர்களுக்குச் சொந்தமான கடைகளை எரித்தபடியும் பொருட்களை அள்ளி ஏற்றியவாறும் இருந்தனர்.

எனக்கு 30 அடி தூரத்தில் இரு தமிழர்கள் திரண்டிருந்த காடையர் கும்பலால் தாக்கப்பட்டனர்.

பேருந்தின் யன்னலூடாக நான் பார்த்த வேளையில் ஒரு சிறுவனின் தலையை காடையனின் கோடரி பதம் பார்த்திருந்தது. இரத்த வெள்ளத்தில் மிதந்தவாறு முனகினான் அந்தச் சிறுவன். எனது பார்வையை மறுபக்கம் திருப்பினேன்.

திடீரென நான் இருந்த பேருந்தினுள் அத்துமீறி நுழைந்த காடையர்கள் நடத்துனரிடம் தமிழர்கள் யாரும் உள்ளே உள்ளனரா என்று விசாரித்தார்கள். நடத்துனரால் நெற்றியிலே திலகமிட்ட தமிழ்ப் பெண் காட்டிக் கொடுக்கப்பட்டாள். உடனடியாக உள்நுழைந்த காடையர் கூட்டத்தில் உள்ள ஒருவன் உடைந்த போத்தலை அப்பெண்ணின் வயிற்றிலே ஏற்றினான். இரத்த வெள்ளம் பேருந்திலுள் ஆறாய் ஓடியது. அந்தப் பெண்மணியை சிறிய யன்னலூடாக வெளியே தள்ளினார்கள். வெளியேயிருந்த சிங்களவர்கள் இந்தக் கொடூரத்தைப் பார்த்து நகைத்தனர். இன்னும் சிலரோ அப்பெண்ணின் மேல் பெற்றோல் ஊற்றி எரியூட்டினர். அதனைச் சூழ நின்று சிங்களவர்கள் கைகொட்டி ரசித்தனர்.

சந்தியில் காத்திருந்த பிக்குமார் இச்செயலை கைதட்டி ஆரவாரித்ததோடு, இலங்கைத் தீவில் உள்ள அனைத்து தமிழர்களையும் இவ்வாறு செய்ய வேண்டும் என்று ஆசி கூறினர்.

நான் வீடு திரும்பிய வேளையில் தமிழர்களின் வீடுகளை தேர்தல் இடாப்புப் பதியும் உத்தியோகத்தர்கள் சிங்களக் காடையருக்கு காட்டிக்கொண்டிருந்தார்கள். காடையர்கள் அவர்கள் காட்டிய வீடுகளை கொள்ளையடிக்கத் தொடங்கினர்." ■

## பேரினவாதம் பேசியது

தமிழர்கள் இலங்கைத் தீவு எங்கும் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், சிறிலங்காவின் ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் என்ன சொன்னார்கள், பாதிக்கப்பட்ட மக்களை நோக்கி ஆறுதல் வார்த்தை கூற மறந்து இனவாதத்தைக் கக்கினர், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினர்.



**ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா**

"உணர்ச்சி வசப்பட்ட ஒரு இனத்தின் வெளிப்பாடு. தமிழ் மக்களைப்பற்றி நான் கவலைப்படப்போவதில்லை"
(11.07.83 இல் டெலிகிராப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில்)




**பிரதம மந்திரி பிரேமதாசா**

"எங்கள் அரசாங்கத்தினால் நாட்டைப் பாதுகாக்க முடியும். இன்னொரு அரசை அமைக்கவோ நாட்டைப் பிளவுபடுத்தவோ இதன் பிறகு யாரும் பேசமுடியாது."
(ஜூலை 30 ஆம் திகதி வானொலியில் ஆற்றிய உரையில்)



**மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினிதிசநாயக்க**

"பல அரச சொத்துக்களை, இராணுவத்தினரை, பொலிசாரை கட்சியினரைக் கொல்லும்போது சிந்திக்க ஆரம்பித்தார்கள். இதற்கு [illegible] முடிவில்லையா என்ற சந்தர்ப்பத்திலேயே 83 ஜூலைக் கலவரம் தொடங்கியது."
(ஓகஸ்ட் 4 ஆம் திகதி தினமின பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி)



**பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி**

"சிங்களவர் தமக்கென்று வேறு ஒரு நாடு இல்லை என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே நாடு பிளவுபடுவதை அனுமதிக்க முடியாது."
(ஓகஸ்ட் 4 ஆம் திகதி தினமின பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஆனையிறவுத்தள வீழ்ச்சி சிங்களத்தின் அதிர்வலைகள்

நாற்பதினாயிரம் துருப்புக்களுடன் உள்ள குடாநாட்டுப் படையின் கண்முன்னால் ஐயாயிரமோ, ஆறாயிரமோ (பத்தாயிரம் என்று வைத்துக் கொண்டாலும்) ஆட்களைக் கொண்ட புலிப்படையிடம் ஆனையிறவை பறிகொடுத்தது ஏன்?

அதுவும் புலிகளைவிட பலமடங்கு ஆயுத பலத்தை சிறீலங்கா இராணுவம் கொண்டிருந்தும் முப்படைகளும் அதற்குப் பக்கபலமாக இருந்தும் புலிகளின் படை நகர்த்தலை தடுக்க முடியாமற் போனது ஏன்?

தகர்த்து நுழைந்த புலிகளைத் தடுத்து முறியடிக்கும் திட்டம் இராணுவத்திடம் இருந்திருக்க வில்லையா?

வடக்கில் உள்ள இராணுவம் மோசமான அழிவை எதிர்கொண்டபடி உள்ளது, சிறீலங்காவும் அவ்வாறே ஆபத்திற்குள்ளாகியது என ஐலண்ட ஆங்கில நாளிதழ்(24.4.00) ஆசிரியர் தலையங்கம் தீட்டி சிங்களத்தின் மனவுணர்வை வெளிப்படுத்தியுள்ளது

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இராணுவப் பாதை திறக்கும் கனவுடன் இருந்த சிங்கள தேசத்திற்கு அதே பாதையை புலிகள் கைப்பற்றி மாபெரும் இராணுவ வெற்றியை பெற்றுக் கொண்டிருக்கும் செய்தி, அவர்களுக்கு அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஊட்டி வருகின்றது.

ஆனையிறவுத் தளம் வீழ்ந்து கொண்டிருந்தபோது சிறீலங்கா அரசாங்கத்தின் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட முக்கிய அரசியல் புள்ளிகள் நாட்டில் இல்லாதது பேரினவாத சக்திகளை கோபமூட்டிவிட்டது.

ரோம் பற்றியெரியும்போது அதை அசண்டை செய்தபடி நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாலும், நீரோ மன்னன் ரோமிலேயே இருந்தான். ஆனையிறவு வீழ்ந்தபோது சந்திரிகா அம்மையார் நாட்டில் இல்லை- ஜெனரல் அனுருத்த ரத்வத்த நுவரேலியாவில் குளிர் காய்ந்தபடி மௌனமாக மறைந்திருந்தார் என ஐலண்ட் பத்திரிகை அவர்களை காரசாரமாகச் சாடி ஆசிரியர் தலையங்கம் வரைந்துள்ளது.

சிங்கள வீரத்திற்கு அவமானத்தை தேடித்தந்த மோசமான இராணுவத் தோல்வியை ஒரு சிறிய பின்னடைவு என்றும், தந்திரோபாய பின்வாங்கல் என்றும் பாதுகாப்பு முன்னரண்களை மாற்றி அமைத்தல் என்றும் வார்த்தை ஜாலம் மூலம் மழுப்ப முயன்ற சிங்கள இராணுவத் தளபதி ஸ்ரீலால் வீர சூரியாவை சிங்களத் தொடர்பூடகங்கள் விமர்சித்தன.

ஆயுதபலத்தில் புலிகள் பலமடைந்துவிட்டனர். அவர்களிடம் 60 எம்.எம், 81 எம்.எம், 120 எம்.எம் மற்றும் பலகுழல் மோட்டார்கள் என ஆயுதங்கள் உண்டு என்ற இராணுவத் தளபதியின் விளக்கத்திற்கு இந்த ஆயுதங்கள் இராணுவத்திடம் இல்லையா என எதிர்க்கேள்வி எழுப்பி இராணுவத் தளபதியை சங்கடத்திற்குள்ளாக்கியுள்ளன.

> **ரோம் பற்றியெரியும்போது அதை அசண்டை செய்தபடி நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாலும், நீரோ மன்னன் ரோமிலேயே இருந்தான். ஆனையிறவு வீழ்ந்தபோது சந்திரிகா அம்மையார் நாட்டில் இல்லை– ஜெனரல் அனுருத்த ரத்வத்த நுவரேலியாவில் குளிர் காய்ந்தபடி மௌனமாக மறைந்திருந்தார்**

இதேசமயம், இது ஒரு தற்காலிகப் பின்னடைவு, புலிகளை நசுக்கும்வரை போர் தொடரும் என்ற அம்மையாரின் கருத்தை ஆமோதித்து பல ஆசிரியர் தலையங்களை சிங்களத்தின் பத்திரிகைகள் எழுதி சிங்களவர்களை சமாதானப் படுத்த முயல்கின்றது.

**"விடுதலைப்புலிகள்"**
**வைகாசி–ஆனி 2000**

ஆனையிறவுத் தளத்தை பாதுகாக்க முப்படைத் தளபதிகளையும் குடாநாடு சென்று சமரை நேரடியாக நெறிப்படுத்தும்படியும் சந்திரிகா அம்மையார் பணித்திருந்தார். இருபது நாட்கள் பலாலியில் தரித்து நின்று படைநடாத்தியும் அவர்களால் ஆனையிறவைத் தக்கவைக்க முடியவில்லை.

தோல்விக்கான காரணங்களை விளக்க கொழும்பில் பத்திரிகையாளர்களை அழைத்து இராணுவத் தளபதி மாநாடு நடத்தியபோது ஒரு பத்திரிகையாளர் கேட்டார். இராணுவத் தளபதியாக நீர் பதவி வகித்தபோது வன்னியில் இராணுவம் தோல்வியைச் சந்தித்தது. இப்போது ஆனையிறவில் எனவே பதவியைத் துறந்து விட்டு வீட்டிற்குப் போகவேண்டும் என்று தோன்றவில்லையா? என்று வினவினார்.

பதவி விலகலால் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது என இரட்டை அர்த்தத்தில் இராணுவத் தளபதி பதில் கூறினார்.

குடாநாட்டைக் கைப்பற்றிய றிவிரச வின் களநாயகர்களாக வர்ணிக்கப்பட்டவர்களில் ஜானக பெரேரா- சரத் பொன்சேகவும் அடங்குவர். ஆனையிறவு வீழ்ச்சியைத் தடுக்க இந்த இரு தளபதிகளும் பலாலிக்கு அனுப்பப்பட்டனர். அந்த வெற்றி நாயகர்களின் கண்முன்னால் ஆனையிறவு பறிபோனது நல்லதொரு வரலாற்று நகைச்சுவை.

ஓயாத அலைகள் மூன்றின் ஆரம்பத்தில் வன்னியில் உத்தரவில்லாமல் பின்வாங்கி ஓடியதற்காக இரண்டு மேஜர் ஜெனரல்கள், ஒரு பிரிகேடியர், ஒரு கேணல், மூன்று மேஜர் கட்டாய விடுப்பில் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். ஆனையிறவில் உத்தரவுப்படி பின்வாங்கியோடல் நடந்தது. இரண்டு களத்திலும் பின்வாங்கியோடல் பொதுவான இராணுவ அம்சமாக இருந்தது. அது உத்தரவுபெற்றா! பெறாமலா! என்பதே சிங்களப்படைகள் சந்தித்துள்ள இன்றைய கள யதார்த்தமாகும்.

சந்திரிகா அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அது சுட்டிய இராணுவ வெற்றி குடாநாடு கைப்பற்றப்பட்டதேயாகும். அதன் பின் முல்லைத்தீவு, பூநகரி, வன்னி, ஆனையிறவு என அடுத்தடுத்து இராணுவத் தோல்விகளை அம்மையாரின் அரசாங்கம் அனுபவித்து வருகின்றது என சிங்கள ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பெரிதாகப் பிரச்சாரப் படுத்தப்பட்ட குடாநாட்டு வெற்றியும் தற்போது புஸ்வாணமாகி வருகின்றது என அவர்கள் அழுது புலம்புகின்றனர்.

சிங்களப்படைக்கு என்ன நடந்து விட்டது சிங்கள தேசமே அச்சத்துடன் அங்கலாய்க்கின்றது. அரசியல், இராணுவத் தலைமைகள் செயலிழந்துவிட்டன என ஒரு சாராரும், படைத் தலைமையிடம் சரியான போர்த்திட்டம் இல்லையென வேறொரு சாராரும் தீர்ப்புக் கூறுகின்றனர்.

> **ஆயுதங்களுடன் மட்டும் ஒரு இராணுவம் போர்புரிய முடியாது, அதற்கு ஒரு அரசியல் சித்தாந்தமும் இருக்க வேண்டும்**

ஆனால் ஐலண்ட நாளிதழில் வாராவாரம் தவறாமல் பேரினவாத வெறியைக் கக்கி வரும் தனிஷ்ட சில்வா என்ற இனவாதச் சிந்தனையாளர் வேறொரு தீர்ப்பை வழங்குகின்றார்.

ஆயுதங்களுடன் மட்டும் ஒரு இராணுவம் போர்புரிய முடியாது. அதற்கு ஒரு அரசியல் சித்தாந்தமும் இருக்க வேண்டும் என திருவாய் மலர்ந்துள்ளார் (26.04.00) பொருள் பொதிந்த இந்த அரசியல் வசனம் இந்தப் பச்சைப் பேரினவாதியின் சொந்த வசனம் அல்ல. உலக வரலாற்றாய்வாளர்கள் ஏற்றுக் கொண்ட பொதுவான வரலாற்றுத் தீர்பு இது. ஏற்கனவே சிங்களப் பௌத்த பேரினவாத அரசியல் என்ற சித்தாந்தத்தை சிங்களப் படைகள் கொண்டுள்ளன. ஆனால், சிங்களப் படைக்கு அப்படியொரு அரசியல் சித்தாந்தம் இல்லை என்றும் மனிதாபிமானக் கருத்துக்களாலேயே பாதிக்கப்பட்டு நிற்கின்றது என்றும் இந்த இனவாத சிந்தனையாளர் நிறுவ முயல்கின்றார்.

ஆனையிறவு வீழ்ச்சியுடன் சிங்கள




உறுமய என்ற பேரினவாத அரசியல் கட்சி முளைத்தெழுந்துள்ளது. சிங்களத்தின் பிரதான கட்சிகள் இரண்டும் போரைச் சரியாக வழிநடாத்தவில்லை. சிங்களவர்களின் உரிமைகளை நிலைநாட்டவில்லை என இந்தப்புதிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது. தமது கட்சி சிங்களவரின் விடுதலைப் போராட்டத்தை நடாத்தப்போகின்றது என தனது கொள்கைப் பிரகடனத்தை கட்சித் தலைமை பிரகடனப்படுத்தியுள்ளது. ஆளும்கட்சி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இப்புதிய கட்சியில் இடம்பெற்றுள்ளனர். முக்கியமான சில சிங்களப் பிரபல்யங்களும் இதில் இணைந்துள்ளன. உலகப் புகழ் பெற்ற சிங்களக் கிரிகெட் வீரர் அர்ச்சுனா ரணதுங்கா இதில் முக்கியமானவர். ஆனையிறவில் காயப்பட்டு கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிப்பாய்களுக்கு வரிசையாக நின்று இரத்தம் வழங்கி, இவர் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்துள்ளார். இப்புதிய கட்சியின் தோற்றத்திற்கும் அதன் கொள்கை நிலைப்பாட்டிற்கும் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரச்சாரப்படுத்தியுள்ளன.

பௌத்த பிக்குகள் அரசியல்வாதிகள் புத்திஜீவிகள் தொடர்பூடகவியலாளர்கள் என பன்முகப்பட்ட பேரினவாதப் படை [illegible] இந்த [illegible] சிங்கள பௌத்த பேரினவாதத்தின் [illegible] தமிழரின் தேசிய இனப் பிரச்சனைக்கு சமாதானவழியில் தீர்வு தேட வேண்டும் என்ற [illegible] நடைமுறைச் சாத்தியமான [illegible] என்பது புதிரான ஒன்றுதான்.

இதேவேளை விடுதலைப்புலிகள் [illegible] ஆனையிறவுத் தோல்வியை [illegible] ஜெயதிலகா என்ற அரசியல் ஆய்வாளர் [illegible].

[illegible]

தொடர்ச்சி 11ம் பக்கம்




வடபுலப் போரரங்கில் புலிப்படை நிகழ்த்திய இராணுவ சாதனைகளை 'ஐலண்ட்' பத்திரிகை இவ்விதம் (இரண்டு கார்ட்டூன்கள்) வெளிப்படுத்தியுள்ளது.



# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

## வீர வணக்கம்

24.11.99 அன்று சிறீலங்காக் கடற்படையுடனான மோதலின்போது ஒரு போராளி வீரச்சாவடைந்தார்

- **லெப்.கேணல் இளந்திரையன்**
  தவசி இந்திரதேவன்
  திருமலை மாவட்டம்
  த.மு பெரியபண்டிவிரிச்சான் மடு
  மன்னார் மாவட்டம்

26.06.00 அன்று யாழ் குடாநாட்டில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினருக்கு ஆயுத தளபாடங்களை ஏற்றிச் சென்ற உகணக் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது 6 கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்

- **கடற்கரும்புலி லெப்.கேணல் ஞானேஸ்வரன் / ஞானக்குமார்**
  (அழகப்போடி வினாயகமூர்த்தி)
  மட்டக்களப்பு
- **கடற்கரும்புலி மேஜர் நல்லப்பன்**
  வேலுப்பிள்ளை இராக
  யாழ் மாவட்டம்
  (த.மு ஒட்டிசுட்டான் புதுக்குடியிருப்பு)
- **கடற்கரும்புலி மேஜர் சூரன்**
  இராசநாயகம் ராசேந்திரன்
  4ம் கட்டை, பூநகரி மன்னார்
- **கடற்கரும்புலி மேஜர் சந்தனா**
  குணசிங்கம் கவிதா
  யாழ் மாவட்டம் (த.மு 7ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு)
- **கடற்கரும்புலி கப்டன் இளமதி**
  கனகநாயகம்பிள்ளை ஜெயசித்திரா
  யாழ் மாவட்டம் (த.மு முழங்காவில், மன்னார்)
- **கடற்கரும்புலி கப்டன் பாமினி**
  பரராஜசிங்கம் விஜயலட்சுமி
  யாழ் மாவட்டம் (த.மு மல்லாவி)

26.06.00 அன்று வன்னி மாவட்டத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

- சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதியான
  **லெப் கேணல் ராஜன் அல்லது ராஜேந்திரன்**
  வலோரியான் காணிக்கைநேசன்
  பெரியமடு மன்னார் மாவட்டம்
  (த.மு இலுப்பைக்கடவை மன்னார்)

இதேதினம் முல்லைத்தீவில் சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

- **வீரவேங்கை வெற்றிச்செல்வன்**
  இராமு சிறிமுருகானந்தன்
  வவுனியா

27.06.00 அன்று நாகர்கோவில் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்

- **வீரவேங்கை சேரமதி**
  மெய்யப்பன் ஜெயலட்சுமி
  உடையார்கட்டு

01.07.00 அன்று சிறீலங்காப் படையினர் மணலாற்றில் அயகுண்டான் பகுதியூடாக முன்னேறியவேளையில் ஏற்பட்ட நேரடி மோதலில் 16 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- **மேஜர் தமிழ்ச்செல்வி**
  செல்லத்தம்பி பங்குசவதி
  மட்டக்களப்பு
- **மேஜர் தர்சினி**
  பிள்ளையான் சகுந்தலா
  மட்டக்களப்பு
- **கப்டன் பரிமளா**
  செல்வராஜா இன்பமலர்
  மட்டக்களப்பு
- **லெப் காவிகா**
  குமாரசாமி தேவகி
  மட்டக்களப்பு
- **லெப் நகுலேஸ்**
  இளையதம்பி தர்சினி
  மட்டக்களப்பு
- **லெப் தேனிசை/இலக்கியா**
  கிருபைராஜா சுஜாத்தா
  மட்டக்களப்பு
- **லெப் சந்திரா**
  கதிரமலை தியாகராணி
  மட்டக்களப்பு
- **லெப் வர்ணப்பிரியா**
  கணபதிப்பிள்ளை சுஜாத்தா
  மட்டக்களப்பு
- **2ம்.லெப் சிந்துஜா**
  அற்புதராஜா சாரதாதேவி
  மட்டக்களப்பு
- **2ம்.லெப் மிருணாளினி**
  கருப்பையா குகனேஸ்வரி
  மட்டக்களப்பு
- **கப்டன் ரமணிதரன்**
  விநாயகமூர்த்தி செந்தூரநாதன்
  மட்டக்களப்பு
- **லெப். உதயதரன்**
  பொன்னுத்துரை கந்தப்போடி
  மட்டக்களப்பு
- **லெப். மதுரகரன்**
  பொன்னையா சித்திரவேல்
  மட்டக்களப்பு
- **2ம்.லெப் உயிர்மணி**
  கணபதிப்பிள்ளை சண்டேஸ்வரன்
  மட்டக்களப்பு
- **வீரவேங்கை சீராளசிங்கம்**
  தங்கராசா அருமைநாயகம்
  மட்டக்களப்பு
- **எல்லைப்படை வீரர் வீரவேங்கை சுபோ**
  நடேசபேசன் புவனராசா
  ஆ பகுதி தேவிபுரம்
  புதுக்குடியிருப்பு

03.07.00 அன்று தமிழீழக் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியொன்றில் ஏற்பட்ட விபத்தில் கடற்கரும்புலி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

- **கடற்கரும்புலி ஜெயாஞ்சலி**
  யாழ் மாவட்டம்

03.07.00 அன்று யாழ் சாவகச்சேரிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடனான மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

- **லெப். கேணல் எஸ்வீரா**
  சிற்றம்பலம் ரஞ்சிதமலர்
  கொக்குத்தொடுவாய் மணலாறு
  (த.மு கருவேலங்கண்டல், ஒட்டிசுட்டான்)

03.07.00 அன்று திருமலை மூதூர் 64ஆம் கட்டை இராணுவப் பொலிஸ் முகாம் மீதான தாக்குதலின்போது இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- **கப்டன் இன்கடர்**
  நவரத்தினராசா ஜெகதீஸ்வரி
  திருமலை (த.மு இல 40 மூங்கிலாறு உடையார்கட்டு)
- **கப்டன் முகிலன்**
  இராமன் ரமேஸ்
  பரந்தன் கிளிநொச்சி (த.மு இல 39 கோணாவில் கிளிநொச்சி)

04.07.00 அன்று நாகர்கோவில் பகுதியூடாக முன்னேற முயன்ற இராணுவத்தினருடனான மோதலின்போது 37 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- **கப்ரன் இலக்கியா**
  செல்வரத்தினம் பாமினி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை கலைப்பிரியா**
  கறுப்பையா தனலட்சுமி
  வவுனியா மாவட்டம்
- **வீரவேங்கை அன்பு**
  வைரமுத்து புஸ்பவதி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை ஈழப்பிரியா**
  கிருஸ்ணானந்தம் வேணுகாதேவி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை மாதுரி / புரட்சிக்கலை**
  இராசரத்தினம் பத்மராணி
  யாழ் மாவட்டம்
- **2ம் லெப். கல்கி/தமிழிசை**
  நடேஸ் தாட்சாயினி
  யாழ் மாவட்டம்
- **2ம் லெப். மதிமகள்**
  நாகராசா அனுசியா
  யாழ் மாவட்டம்
- **லெப்ரினன் யாழரசி**
  சூசைதாசன் கெல்சியா
  மன்னார் மாவட்டம்
- **2ம் லெப். [illegible]**
  [illegible] சுஜனி
  யாழ் மாவட்டம்
- **லெப்ரினன் வெண்ணிலா**
  இராமமூர்த்தி சுரேந்தினி
  கிளிநொச்சி மாவட்டம்
- **2ம் லெப். தமிழ்மலர்**
  திருநாவுக்கரசு ரசீபா
  மன்னார் மாவட்டம்
- **வீரவேங்கை கானக்குயில் / அருள்**
  பாலசிங்கம் பாலசாந்தினி
  வவுனியா மாவட்டம்
- **லெப்ரினன் நாமகள் / செல்வமதி**
  கந்தையா சுஜந்தினி
  முல்லைத்தீவு மாவட்டம்
- **லெப்ரினன் சுசிலா**
  தனுஸ்கோடி கலாரஜனி
  முல்லைத்தீவு மாவட்டம்
- **2ம் லெப் நளாயினி / அமுதச்சுடர்**
  தர்மகுலசிங்கம் கௌசல்யா
  கிளிநொச்சி மாவட்டம்
- **வீரவேங்கை அலைமகள் / அருமகள்**
  செல்லையா செல்வகுமாரி
  யாழ் மாவட்டம்
- **2ம் லெப். நாமதி**
  கந்தசாமி கலைமதி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை அகர்மொழி**
  முருகேசு போதம்மா
  யாழ் மாவட்டம்
- **2ம் லெப் செந்தாழினி**
  பாக்கியநாதன் சற்குணதேவி
  முல்லைத்தீவு மாவட்டம்
- **லெப்ரினன் சிவகங்கை**
  தியாகராசா விமோஜினி
  கிளிநொச்சி மாவட்டம்
- **வீரவேங்கை கலைவதனி / கலைமதி**
  முருகேசு தயாழினி
  முல்லைத்தீவு மாவட்டம்
- **வீரவேங்கை பிறை / செல்வி**
  இராசநாயகம் பகீரதி
  முல்லைத்தீவு மாவட்டம்
- **வீரவேங்கை அகநிலா**
  இராமச்சந்திரன் சசிகலா
  யாழ் மாவட்டம்
- **2ம் லெப். குமுதா**
  சபாபதிப்பிள்ளை விஜயலட்சுமி
  கிளிநொச்சி மாவட்டம்
- **லெப்ரினன் கீதவாணி**
  லட்சுமணன் தர்சினி
  யாழ் மாவட்டம்
- **மேஜர் செல்வி**
  பராஜசிங்கம் கலைச்செல்வி
  யாழ் மாவட்டம்
- **2ம் லெப். பாபுனி**
  விஸ்வலிங்கம் விமலராணி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை காந்தி / யாழ்மொழி**
  செபமாலை மரீண்டா
  முல்லைத்தீவு மாவட்டம்
- **லெப்ரினன் தமிழிசை**
  ஞானபண்டிதர் ரஞ்சிதமலர்
  கிளிநொச்சி மாவட்டம்
- **வீரவேங்கை யாழரசி**
  ஜோச்மரியதாஸ் தர்சினி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை பிறைநிலா**
  மரியதாஸ் கெங்காநாயகி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை தனிகை**
  ஆறுமுகம் பத்மாவதி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை வாசுகி**
  தவராஜசிங்கம் பிறேமினி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை புரட்சிக்கங்கை**
  இரத்தினம் ஜெயகுமாரி
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை பாரதி**
  தேவதாஸ் சாந்ததேவி
  யாழ் மாவட்டம்
- **மேஜர் பிரியங்கா**
  வைத்திலிங்கம் சசிகலா
  யாழ் மாவட்டம்
- **வீரவேங்கை இன்சுடர்**
  சுப்பிரமணியம் புஸ்பமலர்
  கிளிநொச்சி மாவட்டம்

04.07.00 அன்று தென்மராட்சி மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

- **வீரவேங்கை முகிலா**
  கந்தசாமி பராசக்தி
  பாழ்ப்பாணம் (த.மு 14 வீ.[illegible])
  அக்கராயன் கிளிநொச்சி)

04.07.00 அன்று தென்மராட்சி கச்சாய் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத மோதலின்போது ஒரு போராளி வீரச்சாவடைந்தார்

- **வீரவேங்கை இதயன்/தமிழரசன்**
  ஜீவானந்தம் திவாகர்
  மட்டக்களப்பு

05.07.00 அன்று எதிர்பாராதவிதமாக இடம்பெற்ற விபத்தில் 6 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- **கரும்புலி மேஜர் சிறீவாணி**
  சின்னத்தம்பி சாந்தி
  மட்டக்களப்பு
- **மேஜர் அருட்சந்திரன்**
  ஜூலியன் ஜெறி இராஜேஸ்வரன்
  மன்னார் மாவட்டம்
- **மேஜர் செங்கண்ணன்**
  கனகலிங்கம் சசிகுமார்
  யாழ் மாவட்டம்
- **மேஜர் சம்பத்குமார்**
  கனகரட்ணம் ஆனந்தராசா
  யாழ் மாவட்டம்
- **கப்டன் குட்டிக்கண்ணன்**
  மகாலிங்கம் ஜெகதீஸ்வரன்
  யாழ் மாவட்டம்
- **கப்டன் இளங்குமணன்**
  அருளைத்துரை பிரகாஸ்
  யாழ் மாவட்டம்

01.07.00 அன்று சாவகச்சேரிப்பகுதியில் சிறீலங்காப் படையுடனான மோதலின்போது விழுப்புண் அடைந்திருந்த போராளி ஒருவர் 07.07.00 அன்று வீரச்சாவடைந்துள்ளார்.

- **வீரவேங்கை கலைவாணி**
  சிவகுமாரன் சிறீகலா
  முல்லைத்தீவு மாவட்டம்

08.07.00 அன்று சாவகச்சேரிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடனான மோதலின்போது ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

- **2ம் லெப். கனியரசி**
  மனுவேற்பிள்ளை [illegible]
  யாழ் மாவட்டம்

10.07.00 அன்று அரியாலைக் கொழும்புத்துறைப் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது 8 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

- **கப்டன் நிலவன்**
  நல்லையா தவச்செல்வன்
  ஒதியமலை, நெடுங்கேணி
  (த.மு விநாயகபுரம் தறுக்காய்)
- **லெப் புரட்சிப்பாவலன்**
  பரமானந்தம் ரமணன்
  யாழ் மாவட்டம் (த.மு இ. துணுவை, முத்தையன்கட்டு)
- **லெப். இனியவன்**
  உருத்திரபதி விஜைநாதன்
  யாழ் மாவட்டம் (த.மு நெடுங்கேணி விசுவமடு)
- **2ஆம் லெப். செழியன்**
  பொன்னம்பலம் ரவிநாசன்
  யாழ் மாவட்டம் (த.மு நிதன் குடியிருப்பு விசுவமடு)
- **2ஆம் லெப் [illegible]**
  நாகராசா சிவலிங்கநாதன்
  வவுனியா மாவட்டம் (த.மு உடையார்கட்டு)
- **லெப். நிலவன்**
  ஆறுமுகம் மதிவதனி
  யாழ் மாவட்டம் (த.மு இல 15/1 வவுனிக்குளம் மல்லாவி)
- **2ம் லெப். அரசன்**
  (கதிர்காமத்தம்பி கனிஸ்கரன்)
  மட்டக்களப்பு
- **வீரவேங்கை கலையரசன்**
  ஜெகதாஸ் ரமேஸ் டேவிற்சன்
  யாழ் மாவட்டம் (த.மு நாச்சிக்குடா)

10.07.00 அன்று வவுனியாவில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்

- **நாட்டுப்பற்றாளர் குணசேகரம் சுரேந்திரன்**
  இல 76 தெணியன்குளம்
  தறுக்காய்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



## லெப். செல்லக்கிளி

செல்லக்கிளி, அம்மான், சந்திரன்- லெப்டினன்ட் செல்வநாயகத்திற்கு இயக்கம் சூட்டிய பெயர்கள் இவை கல்வியங்காடு என்ற இடத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து ஆரம்பக் கல்வியைக்கூட தொடர முடியாத நிலையில் கல்வியைக் கைவிட்ட செல்லக்கிளி ஆரம்பத்தில் தனியார் நிறுவன விற்பனை வான் ஒன்றில் சாரதியாக வேலைபார்த்தார். தமிழீழத் தேசியத் தலைவரவர்களுக்கு அறிமுகமான காலத்திலிருந்தே இயக்க நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் செல்லக்கிளி.

எந்த வாகனத்தையும் மிகத் திறமையாக ஓட்டும் பயிற்சி பெற்றிருந்த செல்லக்கிளி, ஆயுதங்களாகட்டும், மோட்டார் இயந்திரங்களாகட்டும் பழுதடைந்தால் தானே திருத்தி இயக்கக்கூடிய மிகச் சிறந்த தொழில்நுட்ப அறிவைப் பெற்றிருந்தார். காட்டுப் பாதைகளை அறிவதில் அதிசயிக்கத்தக்க ஆற்றலைக் கொண்டிருந்த செல்லக்கிளி தனது வாழ்க்கையை தான் வாழ்ந்த சூழ்நிலையை ஒரு கொரில்லாப் பயிற்சிக்களமாக ஆக்கிக் கொண்டிருந்தார்.

இயக்கத்தையும் அவரையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவரது பணி இயக்கத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டது இயக்கம் தொடங்கிய காலகட்டத்தில் சுழல் துப்பாக்கி ரவைகளை ஈயத்தை உருக்கித் தயார்செய்த காலத்தில் கூடஇருந்து உதவியதுடன், பின்னர் இயக்க வீரர்களுக்கு தானியங்கித் துப்பாக்கிகளை வைத்துப் பயிற்சி கொடுக்க இரவுபகலாக அலைந்து குறைந்த விலைக்கு ஏராளமான ரவைகளை வாங்கிச் சேர்த்தார். இயக்கத்துக்கென வாங்கப்பட்ட முதல் துப்பாக்கிகூட செல்லக்கிளிக்குச் சொந்தமான இரண்டு மாடுகளை விற்றுக் கிடைத்த பணத்தில் வாங்கப்பட்டதாகும்.

இயக்கத்தின் ஆரம்பகாலத்திலிருந்தே இயக்கம் நடத்திய முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளிலெல்லாம் பங்குபற்றியவர் செல்லக்கிளி. முதன் முதலில் இயக்கம் உளவுப்படை பொலிஸ் அதிகாரியான கருணாநிதியை அழித்தது முதற்கொண்டு அனைத்து முக்கிய தாக்குதல்களிலும் அவர் பங்குபற்றினார்.

07.04.1978 அன்று அதிகாலை 5.30 மணியளவில் முருங்கன் மடுவீதியின் உட்புறமுள்ள காட்டுக்குள் அமைந்திருந்த மரமுந்திரிகைத் தோட்டத்திற்குள் இருந்த விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை முற்றுகையிட்ட உளவுப்படை பொலிஸ் கண்காணிப்பாளர் பஸ்தியாம்பிள்ளை தலைமையிலான பொலிஸ் குழுவினர் நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப் புலிகளை சுற்றி வளைத்தனர்.


இயந்திரத் துப்பாக்கி, கைத்துப்பாக்கி, வேட்டைத்துப்பாக்கி சகிதம் வந்திருந்த பொலிஸாரிடம் பேச்சுக் கொடுத்து தன் புத்தி சாதுரியத்தால் அவர்களின் கவனத்தை திசைதிருப்புகின்றார் செல்லக்கிளி. பொலிஸார் சற்று ஏமாந்திருந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் அனைவரும் ஒன்றாக பொலிஸாரின் மேல் பாய்கின்றனர். அ... னைய பொலிசாரிடமிருந்து சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகளின் கைகளுக்கு மாறுகின்றன. முதன்முதலாக அன்றுதான் கையிலெடுத்த எஸ்.எம்.ஜி செல்லக்கிளியின் கைகளில் வேகமாக இயங்கியது. சில நிமிடங்கள் வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. புலிகளை வேட்டையாடவென வந்த பொலிஸ் கண்காணிப்பாளர் பஸ்தியாம்பிள்ளை, உதவிக் கண்காணிப்பாளர் பேரம்பலம், சார்ஜண்ட் பாலசிங்கம், கான்ஸ்டபிள் சிறிவர்த்தனா என ஒவ்வொருவராக சுட்டு வீழ்த்தப்பட்டனர். இறுதியாகப் பொலிஸார் கொண்டுவந்த ஆயுதங்களாலேயே பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் அவர்கள் வந்த காரிலேயே விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றனர்.

செல்லக்கிளி தலைமையிலான இத் தாக்குதல் நிகழ்ச்சியானது தமிழீழ விடுதலைப் போராளிகள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது.

பருத்தித்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி விஜயவர்த்தனாவைச் சுட்டுவிட்டு அவரிடமிருந்து எடுத்த ஜீப் வண்டியை குன்றும் குழியுமாயிருந்த வீதிகளினூடாக 15 மைல் தூரத்தை ஒன்பது நிமிடங்களில் ஓட்டிச் சென்று அத்தாக்குதலில் ஈடுபட்ட இயக்க வீரர்களை இராணுவ முற்றுகைக்கு உட்படாது வெளிக்கொண்டுவந்த செயல் செல்லக்கிளியின் சாரதீய திறமைக்கு எடுத்துக் காட்டாகும்.

1983 ஜூலை மாதம் 23ஆம் நாள் பலாலியிலிருந்து யாழ் நகர் செல்லும் வீதியில் திருநெல்வேலியில் இராணுவ வண்டிகள் மீதான வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாக்குதலுக்கு செல்லக்கிளியே தலைமை தாங்கி நடத்தினார். 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட வரலாற்றுத் திருப்பு முனையான தாக்குதலை தலைமையேற்று [illegible] செல்லக்கிளி இத்தாக்குதலில் ஜீப் வண்டிக்குள் இருந்து சுட்ட சிங்களச்சிப்பாயின் வேட்டுக்கு இலக்காகி வீரச்சாவு அடைந்தார். செல்லக்கிளி வீரச்சாவடைந்த நாள் தமிழீழ விடுதலைக்காக மக்கள் நடத்தி வரும் ஆயுதப் போராட்ட சகாப்தத்தின் முக்கிய நாளாகவும் அமைந்துவிட்டது.

# கனப்பொழுது



# எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்

## கால்நடை வளர்ப்பு

ஒரு நாட்டினை மேன்மையுறச் செய்ய அந்த நாட்டின் வளம் அறியப்பட வேண்டியது அவசியமானது ஆகும். அதிலும் நாட்டின் வளங்களை உச்சப்பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமானால் அந்த வளங்கள் பற்றிய மிகத்துல்லியமான தரவுகள் அவசியமாகும். அந்தவகையில் தமிழீழத்தின் தற்சார்புப் பொருண்மியம் நோக்கிய வளர்ச்சிக்கு வளங்கள் சம்மந்தமான தேடல் அவசியம். அந்த வகையில் இம்முறை தமிழீழத்தின் கால்நடை வளம் சம்மந்தமாக கருக்கமாகத் தருகின்றோம்.

தமிழீழத்தின் புவியியல் அமைப்பானது விவசாயத்திற்குச் சார்பாக அமைந்திருப்பதுடன் கால்நடை வளர்ப்பிற்கும் சாதகமாகவே அமைந்திருக்கின்றது. தமிழீழத்தின் கால்நடை வளர்ப்பானது தமிழீழ மக்களின் போசாக்கிற்கு கூடிய பங்களிப்பு வழிப்பதுடன் கணிசமான அளவு வருமானத்தை ஈட்டித் தரும் ஊடகமாகவும் இது அமைகின்றது. கால்நடைத் தரவுகளை அவதானிக்கும்போது பின்வரும் உண்மைகள் தெளிவாகப் புரியும்.

இன்று தமிழீழத்தில் உள்ள மாடுகளில் ஏறத்தாழ 90 வீதமான மாடுகள் நாட்டுஇன மாடுகளாகவும் சிறிதளவு இந்தியக் கலப்பினங்களையும் உள்ளடக்குகின்றன. மீதி 10 வீதமான மாடுகள் ஜேர்சி கலப்பின மாடுகளாகவும் காணப்படுகின்றன. நாட்டு இன மாடுகள் மிகக்குறைவான பாலுற்பத்தித் திறனையும் (1-1.5 லீற்றர் பால் நாளொன்றிற்கு), குறைந்த உடல் நிறையும் (150-180 கிலோகிராம்) கொண்டவையாக இருக்கின்றன. இந்திய மற்றும் இந்திய நாட்டுக்கலப்பினங்கள் ஓரளவு சிறிது அதிகமான பாலுற்பத்தித் திறனையும் (நாளொன்றிற்கு 2-3 லீற்றர்), உடல் நிறையையும் (250-300 கி.கி) கொண்டவையாகும்.

80-90 வீதமான எருமை மாடுகளும் நாட்டு இன எருமைகளையே உள்ளடக்குகின்றன. மீதி 10-20 வீதமானவை இந்தியக் கலப்பினங்களை உள்ளடக்குகின்றன. இந்தியக்கலப்பின எருமைகள் நாளொன்றிற்கு 2-3 லீற்றர் பாலுற்பத்தியை தரவல்லவை. ஆனால் நாட்டு இன எருமைகள் நாளொன்றிற்கு 1லீற்றர் பாலையே உற்பத்தி செய்யக்கூடிய திறனுடையவை.

தமிழீழத்தில் உள்ள மொத்த ஆடுகளின் எண்ணிக்கையில் பெரும்பாலானவை நாட்டு இன ஆடுகளாக உள்ளன. நாட்டு இன ஆடுகள் குறைந்த நிறை இறைச்சியையே உற்பத்தி செய்யக்கூடியன. யாழ் மாவட்டத்தில் குறைந்தளவு எண்ணிக்கையில் உள்ள இன ஆடுகள் அதாவது ஜமுனாபாரி, சானன் மற்றும் இனங்களும், கலப்பினங்களும் காணப்படுகின்றன.

ஆடுகள் குறைந்த காலப்பகுதியில் இனவிருத்தி ஒரே காலத்தில் 2-3 குட்டிகளையீனுதல், அதிக நார் உணவு சமிபாட்டுத் திறன் போன்ற பரம்பரைச் சிறப்பியல்புகளைக் (Inherent qualities) கொண்டுள்ளன. மற்றும் ஆடுகளின் உணவு அளவின் தேவை மிகவும் குறைவாக இருப்பதுடன், ஆடு வளர்ப்புக்குரிய முதலீடு, உணவு வழங்குவதற்குரிய செலவு என்பனவும் மிகவும் குறைவாகவே தேவைப்படுகின்றன.

தமிழீழத்தில் ஒரு வருடத்திற்கு உட்கொள்ள வேண்டிய சிபார்சு செய்யப்பட்ட முட்டைத் தேவை ஒரு நபருக்கு 48 முட்டைகளாக இருந்த போதிலும் சராசரியாக ஒருவர் ஒரு வருடத்திற்கு உட்கொள்ளும் முட்டையின் அளவு 14-18 முட்டைகளாகவே உள்ளது. அவ்வாறே ஒருவர் சராசரியாக உட்கொள்ளும் இறைச்சியின் அளவும் சிபார்சு செய்யப்பட்ட அளவிலும் குறைவாகவே உள்ளது. எனவே ஒரு மனிதனுக்கு வேண்டிய முட்டை, இறைச்சித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முட்டை உற்பத்தியும், இறைச்சியுற்பத்தியும் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

[illegible] தமிழீழத்தின் கோழிகளின் எண்ணிக்கையைக் கொண்டு கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு இங்கு 3782000 முட்டைகள்தான் உற்பத்தி செய்யமுடியும் [illegible] எனவே இது எமது 50 வீதமான தேவையைத்தான் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். இங்கு ஒரு நாள் கோழிக்குஞ்சுகளும், கோழியுணவும் தொடர்ந்து இடைவிடாது கிடைக்கக் கூடியதாக இருக்குமேயானால் நாம் எமது முட்டைத் தேவையையும், இறைச்சித் தேவையையும் இலகுவில் உற்பத்தி பெறக்கூடியதாக இருக்கும். கிட்டத்தட்ட 200,000 நல்லின முட்டைக்கோழிகள் வளர்க்கப்படின் தமிழீழ மக்களின் முட்டைத் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாகவுள்ளது.

■




## தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத் தேசியக்கொடியின் பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் வெளியிடப்பட்ட தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்ற சிறுகைநூலில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை, பகுதி பகுதியாக, இங்கு பிரசுரிக்கின்றோம்.

# தேசியக்கொடி

### கொடி வணக்க ஒழுங்கு முறை

– நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளிலும், குறிப்பிட்ட சில பொது இடங்களிலும் தேசியக்கொடி நாள் தோறும் பறக்க விடப்படலாம்.

– வெளிநாடுகளிலுள்ள எமது பணியகங்களிலும், தூதரகங்களிலும் பகலில் எந்நாளும் எமது தேசியக்கொடி பறக்கவிடப்படலாம்.

–குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் பொதுமக்களின் வீடுகளிலும், கட்டிடங்களிலும் தேசியக்கொடி பறக்க விடப்படலாம். ஆனால் இவை முறையாகக் கம்பங்களில் மட்டுமே ஏற்றப்பட வேண்டும்.

–தெருவுக்குக் குறுக்காகவோ, பக்கமாகவோ கயிறுகளில் தேசியக்கொடி தொங்கவிடப்படக்கூடாது.

–காலை 6 மணிக்கு முன்போ, மாலை 6 மணிக்கு பின்போ தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது. மாலை ஆறுமணிக்குப் பின் தொடங்கும் விழாக்களில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது.

–கடும் மழையில் நனைந்து பறக்க முடியாத நிலையில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது. கடும் மழையாயின் வெளியில் கொடியேற்ற நிகழ்வைத் தவிர்க்க வேண்டும்.

–தேசியக்கொடியைத் தலைகீழாகப் பறக்கவிடக் கூடாது.

–தேசியக்கொடியிலுள்ள புலி கொடிக்கம்பத்தைப் பார்த்தவாறு பறக்கவிடப்படக் கூடாது. புலியின் பார்வை கொடிக்கம்பத்திற்கு எதிர்ப்புறமாகக் கொடிபறக்கும் பக்கமாக இருக்கும் வகையில் கொடி பறக்கவிடப்பட வேண்டும்.

–தேசியக்கொடியைக் கீழிலிருந்து பறந்தபடியிருக்கும் நிலையிலேயே ஏற்ற வேண்டும். மடித்தபடி மேலே ஏற்றி அங்கிருந்து விரிந்து பறக்கும் வகையில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது.

03ம் பக்கத் தொடர்ச்சி

## எமது மக்களின்...

நிறுத்தம் பேச்சுவார்த்தைக்கான சாத்தியம் உண்டு. ஆனால் அதேவேளை யாழ்ப்பாணம் மீதான இராணுவ ஆக்கிரமிப்பை அரசாங்கம் தொடர்ந்து நீடிக்க விரும்பினால் போர்ச் சூழ்நிலை தொடரும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பகுதிகளை விடுதலைப் புலிகள் ஏற்கனவே மீட்டெடுத்துள்ளனர். எமது இலட்சியத்தை நாம் அடையும் வரை யாழ். மீட்புச் சமர் தொடரும்.

**கேள்வி:-** தமிழரின் இனப் பிரச்சினைக்கான தீர்வானது இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றின் கீழ் அமையவேண்டுமென உலக வல்லரசான அமெரிக்காவும், பிரதேச வல்லரசான இந்தியாவும் வலியுறுத்தியுள்ளன. தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்காக நடாத்தப்படும் உங்களது விடுதலைப் போராட்டத்திற்கு இந்தக் கூற்றுக்கள் பாதகமாக அமையுமென நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:-** சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அமெரிக்காவும் இந்தியாவும் இத்தகைய அறிக்கைகளை வெளியிட்டிருக்கலாம். இந் நாடுகளது பூகோள அரசியல் நலன்களையும் அச்சங்களையும் நாம் புரிவோம். அரசியல் சுதந்திரம் கோரி தமிழர் நிகழ்த்தும் போராட்டத்திற்கு பாதகம் விளைவிக்கும் நோக்கில் இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டதாக நாம் நினைக்கவில்லை. பேச்சுவார்த்தை மூலமாக ஒரு அரசியல் தீர்வுகாண இரு தரப்பினரும் முயற்சியெடுக்க ஊக்கமளிப்பதற்காகவே இந்தக் கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கலாம். தமிழரின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாணும் விடயத்தை நிர்ணயிக்கும் சக்தி, அமெரிக்க வல்லரசிடமோ அன்றி இந்தியப் பிராந்திய வல்லரசிடமோ, அல்லது சிறீலங்கா அரசிடமோ இருக்கவில்லை. எமது தேசத்தின் அரசியல் அந்தஸ்தையும் தலைவிதியையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது எமது மக்கள்தான், தமிழீழ மக்கள்தான்.

**கேள்வி:-** இந்திய அரசானது சிறீலங்காவிற்கு 100 மில்லியன் டொலர் பெறுமதியான கடன்வசதி வழங்கியிருக்கின்றது. அதுபற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:-** ஒரு மனிதாபிமான உதவியாக இந்தக் கடன் வசதி வழங்கப்பட்ட போதும், அது சிறீலங்காவின் நிதி வளத்தை மேம்பாடு செய்யும் என்றே நாம் கருதுகிறோம். அத்துடன் மறைமுகமான வழியில் சிறீலங்காவின் போர் முயற்சிக்கும் அது உதவக்கூடும். இந்தக் கடனுதவியானது எந்தவித மனிதாபிமான நோக்கத்தையும் பேணப்போவதில்லை. மாறாக இது சிறீலங்கா அரசின் இராணுவ முயற்சிக்கு ஊக்கமளித்து எமது மக்களின் துன்பப் பழுவை மேலும் அதிகரிக்கலாம். இதைவிட எமது மக்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர். வடக்கில், மருந்தும் உணவும் தடைசெய்யப்பட்ட நிலையில் எமது மக்கள் பலர் செத்து மடிகிறார்கள். அவர்களுக்குத்தான் அவசரமான மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன. ஆனாலும் எமது மக்களின் இந்தப் பெரும் அவலம் இந்தியாவின் ஆன்மீகத்தையோ அல்லது இந்தியாவின் மனச்சாட்சியையோ தொட்டதாகத் தெரியவில்லை. ■

08ம் பக்கத் தொடர்ச்சி

## ஆனையிறவுத்தள வீழ்ச்சி ...

சிங்களப்படை ஆனையிறவு நிலத்தில் சந்தித்த தோல்வியும் இவ்வாறான அரசியல் இராணுவப் பரப்புரை விளைவுகளை உண்டு பண்ணியுள்ளன என அந்த ஆய்வாளர் சொல்லாமல் சொல்லியுள்ளார். புலிகள் இயக்கத்தின் இராணுவ வளர்ச்சியை உலகத் தொடர்பூடகங்கள் பாரபட்சமின்றி புகழ்ந்துரைக்கின்றன. தலைவர் பிரபாகரனின் மதிநுட்பமிக்க இராணுவச் செயற்பாடுகளை அவை பாராட்டவும் வியந்து போற்றவும் செய்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பியக் கண்டத்தில் வரலாற்றுத் திருப்பு முனைகளை ஏற்படுத்திய இராணுவத் தளபதிகளைப் பட்டியலிட்டு, பாரிய படைக்கலசக்தி மற்றும் ஆட்பலத்துடன் அவர்கள் புரிந்த இராணுவச்சாதனைகளை, மிகக் குறைந்த படைக்கலசக்தி மற்றும் ஆட்தொகையை வைத்துக் கொண்டு தமிழீழத் தேசியத் தலைவரவர்கள் வரலாற்றுச்சாதனை புரிந்துள்ளார் என இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனையிறவுத் தோல்வி குடாநாட்டுப் படையின் இருப்பை பேராபத்திற்குள்ளாக்கிவிட்டது. அச்சமடைந்த சந்திரிகா அரசாங்கம் குடாநாட்டுப் படையைப் பாதுகாக்க வெளிநாட்டு உதவியைக் கோரும் அளவிற்கு நிலைமை சென்றது.

1991இல் ஆனையிறவை படையினர் பாதுகாத்தபோது இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் கமிலட் வனசிங்க இப்படிப் பதறுகின்றார். சர்வதேசச் சமாதானப் படையை வரவழைக்க இதுதான் தருணம், பொதுநலவாய அமைப்பிடம் உதவி கோரலாமே! என்றுள்ளார். அபாயகரமான நிலைமையை சமாளிக்க அபாயகரமான தீர்வுகள் தேவை என அன்னியப்படை உதவிக்கு அந்த முன்னாள் தளபதி தத்துவ விளக்கம் கொடுத்துள்ளார்.

வியட்நாமின் சைக்கோன்(கோசிமின் நகரம்) நகரிலிருந்து கீசங்க(Khe Sank) என்ற இடத்திலிருந்தே அமெரிக்கப் படைகள் அவசரம் அவசரமாக வெளியேற்றப் பட்டுப் பாதுகாக்கப்பட்டன. இந்த வரலாற்று ஊரை மனதில்வைத்தபடி தயான் ஜெயதிலகா எழுதுகின்றார். இன்னொரு கீசங்கை பிரபாகரன் உருவாக்கிவிட்டார். இவ்விதமான வெற்றிகளைப் பெற அவர் மேலும் முயல்வார் என்றுள்ளார்.

தேசியத் தலைவரவர்களின் இராணுவப் புலமையை இவ்விதம் தயான் ஜெயதிலகா விதந்துரைத்தாலும், தனது ஆய்வுக் கட்டுரையின் முடிவாக வெளிநாட்டு இராணுவ உதவிகளைப் பெற்று புலிகள் இயக்கத்தை நசுக்க வேண்டும் - ஆயுதப் போராட்டத்தை ஒடுக்க வேண்டும் என்றே வாதிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைப் போன்றே, சிங்களப் படைகள் தற்போது சந்தித்துவரும் பாரிய இராணுவத் தோல்வியிலிருந்து அது மீண்டு வந்து புலிகளைப் போரில் வெல்ல வேண்டும் என்றே சிங்களத் தொடர்பூடகங்களும் பேரினவாதப் புத்திஜீவிகளும் வலியுறுத்தி வருகின்றனர். ■

## தமிழர் வாழ்விடங்கள் மீது குண்டு வீசும் சிறீலங்கா அரசை உடன் தடுத்து நிறுத்துங்கள்

**ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களை நோக்கி வணபிதா இமானுவேல் அடிகளார் வேண்டுகோள்**

யாழ் மாவட்ட முன்னாள் குருமுதல்வர் எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத் தலைவருக்கும் அங்கத்தவர்களுக்கும் தமிழ்மக்கள் சிங்கள இனவாத அரசின் பிடியில் சிக்கித்தவிக்கும் நிலைகுறித்தும் அவர்களை பாதுகாக்கக்கோரியும் அவசரக்கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். இமானுவேல் அடிகளாரின் கடிதத்தில் இருந்து...

சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடுத்துவரும் இன அழிப்புத் தாக்குதல்கள், கைதுகள், சித்திரவதைகளை உடன் நிறுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உடன் அழுத்தம் கொடுக்க வேண்டும். சிங்கள அரசு தனது வரவு செலவுத் திட்டத்தில் 30 வீதத்தை போருக்குச் செலவிடுகின்றது. சமாதானத்திற்கான யுத்தத்திற்கென இஸ்ரேலிடம் 8 கிபிர் ரக யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்துள்ளது. இதன் மூலம் அன்றாடம் இலங்கையின் வடபாகத்தில் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய தாக்குதல்களில் அண்மைக்காலத்தில் 500 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக மன்னார் பேராயர் வணக்கத்துக்குரிய ஜோசப் இராயப்பு அவர்கள் தெரிவித்துள்ளார். சிங்கள அரசின் செய்தித்தடை பாரிய [illegible] சரியான செய்தி வந்து சேருவதில்லை. இத்தகைய மனிதவிரோத, இன விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சிங்கள அரசிற்கு எவ்வித உதவியையும் மேற்குலக நாடுகள் வழங்கக்கூடாது.

சிறீலங்காப் படையினரால் தமிழ்மக்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். இந்நிலையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்படும் அகதித் தமிழர்கள் பெரும் சித்திரவதையை அனுபவிக்கின்றனர். தயவு செய்து தமிழ் மக்களை சிறீலங்காவில் நிலவிவரும் தற்போதைய சூழ்நிலை காரணமாக திருப்பியனுப்ப வேண்டாமெனக் கோருகின்றேன். ■

# அறம் வென்றது!

## தேசியத் தலைவரின் திறம் வென்றது!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் 25 ஆண்டுகால வீரம் செறிந்த போராட்ட வரலாற்றைத் தாய்த் தமிழீழம் – திசை நான்கும் பரவி வாழும் உலகத் தமிழினம் – தலை நிமிர்வோடு திரும்பிப் பார்க்கிறது.

ஒரேயொரு பழைய கைத்துப்பாக்கியோடு மட்டும் உலாவிய பழைய பிரபாகரனின் ஒளிமுகத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

நெருப்பில் அவர் நடந்த நெருக்கடியான பொழுதுகள் அவை.

சிங்கள உளவுத்துறையின் கழுகுக் கண்களுக்கு நடுவே சின்னஞ் சிறுவனாய் – ஆனால் சிலிர்த்த வேங்கையாய் அவர் நின்றார்.

அவரிடமிருந்த 'போராற்றல்' வரலாற்றில் எவரிடமுமில்லாத பேராற்றல் என்பதால் அவர் நிமிர்ந்தார்.

தேசம் எதிரிகளால் வேட்டையாடப்பட்டதால் – தென்றலைப் புயலாக்குவதும் – பசுவைப் புலியாக்குவதும் எளிது என்பதை அவர் தெரிந்து கொண்டார்.

விளைவு.....

ஒரு பிரபாகரன் இருபதாயிரம் விடுதலைப் புலிகளானான். ஒரு கைத்துப்பாக்கி பல்லாயிரம் ஏவுகணைகளானது.

'அகவாழ்வுக்கு மட்டுமே' என்றிருந்த தமிழ்ப் பெண்களைப் புறவாழ்வுக்கு அழைத்து வந்த தலைவரைப் பார்த்தோம்.

சமையல் அறையில் அகப்பை பிடித்த கைகள் சமர்க்களத்தில் துப்பாக்கி பிடித்தன.

வீரனாய்த் தமிழன் விளைந்தான். புலிகளின் கையில் இருந்த குண்டை விட அவர்களின் கழுத்தில் இருந்த நஞ்சு எதிரிகளைப் புயலாய்த் தாக்கியது.

சங்கராய் – மாலதியாய் – மில்லராய் – திலீபனாய் – கிட்டுவாய் –அங்கயற்கண்ணியாய் நெருப்புச் சரித்திரம் படைத்தது.

ஆயிரமாயிரம் புலிமாவீரர் கல்லறைகள் தமிழீழ விடுதலை மாளிகையின் அத்திவாரக் கற்களாயின.

எதிரியின் எடையை விட புலிகளின் எடை உயர்ந்தது.

இருபதாயிரம் சிங்களப்படை வெறியரை ஆனையிறவில் இரண்டாயிரம் புலிகள் விரட்டியடித்தனர்.

'அறம்' புலிகள் இயக்கத்தின் ஆணிவேராய் இருந்ததால், பிரபாகரன் அவர்களின் திறம் வென்றது. தமிழ் மக்களின் அறம் வென்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினதும் – போராட்டத்தினதும் கால் நூற்றாண்டு நிறைவு விழா நிகழும் இவ்வேளையில் உலகனைத்தும் பரவிய தமிழீழ உணர்வாளர்களின் மகிழ்ச்சியில் நானும் பங்கு கொள்கிறேன்.

இனிய தமிழீழத்தாய் அரியணை ஏறும்வரை தமிழீழ விடுதலைப் போருக்கு உறுதுணையாய் இருப்போம்! இருப்போம்!

**-உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்-**

## ம.தி.மு.க எழுச்சி மாநாடு



தமிழீழ விடுதலை எதிர்ப்பாளர்களினால் பெரும் கசப்போடு எதிர்பார்க்கப்பட்ட ம.தி.மு.க மாநாடு 2000 யூலை 1,2 ஆகிய திகதிகளில் ஈரோட்டில் நடைபெற்றது.

**பேரணியில் ஒலித்த கோசங்கள்**

"ஒலிக்கட்டும் ஒலிக்கட்டும். ஈழத்தமிழர் ஆதரவுக்குரல் ஒலிக்கட்டும்"

" புலிகள் இரத்தம் எங்கள் ரத்தம்"


" தேவைப்பட்டால் நாங்களும் செல்வோம்"

"குரல் கொடுப்போம் ஈழம் மலரக் குரல் கொடுப்போம்"

"நாதியற்றவனா? தமிழன் என்ன நாதியற்றவனா?"

"எங்கள் ரத்தம் எங்கள் ரத்தம் ஈழத்தமிழர் சிந்தும் ரத்தம்"






| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris | GERMANY<br>TPC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | ITALY<br>TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L Jamaica<br>New York 11432 |